ஞாயிறு | ஒக்டோபர் 1

📖 மாலை வாசகம் – சங்கீதம் 23:4

# அசையாத நிலையான வாழ்க்கை

நடு இராத்திரியிலே, பெரும் மழையோடு புயல்காற்று கோரமாக வீசிக் கொண்டிருந்தது. பெரு வெள்ளம் ஏற்பட்டதால், ஊரிலுள்ள ஜனங்கள் யாவரும் ஒதுங்குவதற்கு பாதுகாப்பான இடத்தை தேடினார்கள். அந்த ஊரிலே பல ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட மாளிகையொன்று அந் தப் பெருங்காற்றின் மத்தியிலும் அசையாமல் உறுதியாக இருந்ததால், ஜனங்கள் யாவரும் அங்கே தஞ்சம் புகுந்தார்கள். அந்த மாளிகையா னது, ஆழமாக தோண்டி மிக பெல மான அஸ்திபாரத்தின்மேல் உறுதி யாக கட்டப்பட்டிருந்தது. அந்த வீடு அசையாமல் நிலையாக இருந்த தால், ஆபத்துக் காலத்திலும் பலரு க்கு தஞ்சமாக இருந்தது. பிரியமான சகோதர சகோதரிகளே, கோணலும், மாறுபாடான உலகத்திலே வாழும் நம்முடைய வாழ்க்கையானது எங்கே கட்டப்பட்டிருக்கின்றது என்று ஆரா ய்ந்து அறிந்து கொள்ள வேண்டும். இந்தப் பூமியிலே வாழும்வரை நம் வாழ்க்கையானது, குடும்பம், உறவு, நண்பர்கள், சபை, வேலை, பாடசா லை, வெளி இடங்கள், அதிகாரங்கள் என்ற வட்டத்திற்குள் அமை க்கப் பட்டிருக்கின்றது. ஒவ்வொரு நாளும் நாம் சன்மார்க்கர், துன்மார்க்கர், தேவனுக்கு பயந்து அவர் வழியிலே நடக்கின்ற மனிதர்களையும் சந்தி க்கின்றோம். போராட்டங்கள் நிறைந்த மனித வாழ்விலே, துன்பங்கள், பிரச்சனைகள் எப்பக்கத்திலுமிருந்து நம்மை நோக்கி வரலாம். அவை கள் பெரு மழையைப் போலவும், பெருங் காற்றறைப்போலவும் நம் வாழ்வை நோக்கி வருகின்றதாயிருக்கின்றது. வெள்ளங்கள் புரண்டோடி வாழ்வின் அஸ்திபாரங்களிலே மோதலாம். அந்த வேளையிலே பலர் கலங்கி, திகைத்து, நிலை தவறிப் போய்விடுகின்றார்கள். ஆனால், ஆண் டவராகி இயேசுவினிடத்தில் வந்து, அவருடைய வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் ஆழமாய்த் தோண்டி, கற்பாறை யின்மேல் அஸ்திபாரம்போட்டு, வீடுகட்டுகிற புத்தியுள்ள மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான். பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின் மேல்மோதியும், அதை அசைக்கக்கூடாமற்போயிற்று. ஏனென்றால் அது வார்த்தையானவராகிய கிறிஸ்து இயேசுவாகிய கன்மலையின்மேல் அஸ் திபாரம் போடப்பட்டிருந்தது. உங்கள் வாழ்க்கை எங்கே கட்டப்பட்டிரு க்கின்றது? மனிதகுலத்தின் இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த் தையின்படி வாழ்கின்றவன், ஆபத்தைக் கண்டு அஞ்சமாட்டான். அவன், மற்றவர்களுக்கும் வழிகாட்டியாகவும், தஞ்சமாகவும் இருக்கின்றான்.

**லூக்கா 6:48**

**பெருவெள்ளம் வந்து, நீரோ ட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும், அதை அசைக்க க்கூடாமற்போயிற்று;**

**ஜெபம்**: அசைவில்லாத நிலையான வாழ்க்கை வாழ என்னை வேறுபி ரித்த தேவனே, உம் வார்தையினால் உண்டாகும் நிறைவான வாழ்க் கையை நான் உணர்ந்து கொள்ளும்படி பிரசாமுள்ள மனக்கண்களை தந்தருள்வீராக.. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மிகையான கட்டுப்பாடுகள்

**சங்கீதம் 119:1**

**கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள்**

ஒரு ஊரிலே வாழ்ந்த மனிதனானவன், அவனது ஊரிலே அதிகாரிகளால் அமுல்படுத்தப்பட்டிருக்கும் சட்டங்கள் மிகவும் கடினமானதெனவும், இங்கே மனிதர்கள் சந்தோஷமாகவும், உல்லாசமாகவும் வாழ முடியாது. ஏனெனில் இங்கு பலவிதமான கட்டுப்பாடுகளை வைத்திருக்கின்றார்கள். இவை யாவும் ஒரு தனிமனிதனுடைய சுதந்திரம் என்று கூறி தன் சிறுபிள்ளைகளோடு, தூரத்திலுள்ள பட்டணமொன்றிற்கு சென்று அங்கே மகிழ்ச்சியோடு வாழ்ந்து வந்தான். காலங்கள் கடந்து சென்ற பின்னர், தன் மகனானவன், போதைவஸ்துக்கு அடிமை யாகி, தகாத இடங்களுக்கு சென்று தன் வாழ்வை இளவயதிலேயே மாய்த்துக் கொண்டான். மனவேதனையை தாங்க முடியாத தாயானவள், ஏன் இந்த பட்டணத்திலே அழிவுக்குரிய காரியங்களை அனுமதிக்கின்றார்கள். இதனால் அழிவு வரும் என்று அறிந்தும்,பட்டணத்தின் அதிகாரிகள் ஏன் அதற்கு எதிராக கடும் சட்டங்களை போட்டு தடுத்து நிறுத்தவில்லை என்று மனம் கசந்து அழுதாள். பிரியமானவர்களே, மனிதர்கள் இன்று சுதந்திரத்தை நாடிச் செல்கின்றார்கள். ஆனால், அந்த சுதந்திரத்தினால் உண்டாகும் விளைவுகளின் பொறுப்பை தாங்கள் ஏற்றுக் கொள்ள மறு க்கின்றார்கள்.தேவனாகிய கர்த்தர் ஆசீர்வாதத்தையும், சாபத்தையும் தம் ஜனங்கள் முன்பாக வைத்து, அதை தெரிந்து கொள்ளும் சுதந்தரத்தையும் தம் ஜனங்களுக்கு கொடுத்தார். ஆசீர்வாதத்தின் வழியிலே வாழ்வதற்குரிய வாழ்வின் பிரமாணங்களை தம்முடைய ஜீவ வார்த்தை வழியாக கொடுத்திருக்கின்றார். அந்த ஆசீர்வாதத்தின் வார்த்தைகள் இன்று சில விசுவாசிகளுக்கு பரமாகவும், அடிமைத்தனமாக தோன்றுவதால், அதை தள்ளிவிட்டு, சுதந்திரத்தை தேடி வேறு இடங்களுக்கு செல்கின்றார்கள். தங்கள் வாழ்விலே அழிவுகளை சந்திக்கும் போது, தேவன் ஏன் இப்படி எங்களுக்கு செய்தார்? தேவன் அன்புள்ளவரானால், ஏன் இதைத் தடுத்து நிறுத்தவில்லை? என்று தேவனுக்கு விரோதமாக குரல் எழுப்புகின்றார்கள். தேவன் அன்புள்ளவரானதினாலே, தம்முடைய ஒரே பேறான குமாரனை நமக்காக ஒப்புக் கொடுத்தார். திருக்குமாரானாகிய இயேசு வழியாக நிறைவான வாழ்வின் ஒரே வழியை கற்றுந் தந்திருக்கின்றார். எனவே நாம் உணர்வற்ற, பொறுப்பற்ற, எப்போதும் முறுமுறுக்கின்ற பிள்ளைகளாக வாழாமல், உன்னதமான அழைப்பை உணர்ந்து, பெற்ற சுயாதீனத்தை தகாதவிதமாய் அனுபவிக்காமல், பொறுப்புள்ள தேவ பிள்ளைகளாக பொறுமையோடு தேவனுடைய வார்த்தையின் வழியிலே வாழ்வோமாக.

**ஜெபம்:** நன்மையை நிறைவாய் பெறும்படி என்னை அழைத்த தேவனே, நான் உம்மிடத்தில் பெற்றுக் கொண்ட சுயாதீனத்தை தகாதவிதமாய் அனுபவிக்கால், உம்முடைய வார்த்தையின்படி வாழ கிருபை செய்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சபையில் நல்லொழுக்கம்

**1 கொரிந்தியர் 14:40**

**சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது.**

சிறிய கிராமமொன்றிலே வாழ்ந்து வந்த ஜனங்கள், தங்கள் பிள்ளைகள் கல்வி கற்பதற்கு அக்கிராமத்திலே பாடசாலையேதும் இல்லாதிருந்த தால், கிராமத்தின் மூப்பர்கள் ஒன்றுகூடி அந்த கிராமத்திலே ஒரு சிறிய பாடசாலையை அமைத்துக் கொண்டார்கள். சிறியதான அந்த பாட சாலையிலே கல்விகற்று வந்த பிள் ளைகளின் பெற்றோர் ஒருவரையொ ருவர் அறிந்திருந்ததால், பாடசாலை மிகவும் நன்றாக இயங்கி வந்தது. ஆண்டுகள கடந்து சென்ற போது, இந்த செய்தியானது மற்ற ஊர்களு க்கும் வேகமாக பரவியதால், பல திசைகளிலுமிருந்து பலவிதமான மாணவர்கள் அந்த பாடசாலைக்கு கற்க வந்தார்கள். இதினிமித்தம் மாணவர்கள் எண்ணிக்கை மாத்திரம் அல்ல பிரச்சனைகளின் எண்ணி க்கையும் வளர ஆரம்பித்தது. அதனால், பாடசாலையானது சிறப்பாக இயங்க வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு, ஒழுக்க நெறிகளை பேணும்படியாக, சில ஒழுங்கு முறைகளையும் அறிமுகப்படுத்தினார் கள். காலம் கடந்து செல்லும்போது, உலகநாகரீகமும் மாறிக் கொண்டு போனதினாலே, எதிர்பாராத புதிதான பல பிரச் சனைகள் அங்கே அவ் வப்போது ஏற்பட்டது. அந்த வேளையிலே அதிகாரிகள் புதிய ஒழுங்கு முறைகளை அறிமுக ப்படுத்தினார்கள். அநேகமானோர், அந்த ஒழுங்கு முறைகளை ஆதரித்த போதும், ஒரு சிறு குழுவினர், அதிகாரிகளுக்கு எதிர்த்து நின்றார்கள். ஒழுங்கற்ற பிள்ளைகள் எங்கே படிக்கப் போவா ர்கள்? இத்தகைய ஒழுங்கு முறைகள் இருந்தால், அவர்கள் இங்கே வரமாட்டார்கள் என்று முறுமுறுத்தார்கள். அந்த பாடசாலையின் அதிபர் அவர்களை நோக்கி: கல்வி கற்பதற்காக எந்த பிள்ளையும் இங்கே வருவதற்கு தடையில்லை. ஆனால், பாடசாலையில் இணைந்த பின்பு, மற்றய மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் குழப்பம் ஏற்படுத்தாமல், அவர்கள் இங்கே படிக்க வேண்டும் என்று திட்டமாக பதிலளித்தார். ஒழுங்காக இயங்கிவரும் குடும்பத்தில் ஒழுங்குமுறைகள் சீராக இருக் கும். சிறப்பாக இயங்கும் எந்த அமைப்பிலும் ஒழுங்கு முறைகள் இரு க்கும். மேலும் ஒருவன் மல்லயுத்தம் பண்ணினாலும், அவன் சட்டத்தின் படிபண்ணாவிட்டால் முடிசூட்டப்படான். அது போலவே, சபைக்கு வருவ தற்கு எவருக்கும் தடையில்லை, ஆனால் சபையில், சகல காரியங்களை யும் ஒழுங் காகநடத்தப்படுவதற்கு ஒழுங்குமுறைகள் அவசியமானது. எனவே, நீங்கள்ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ அவைகளையே சிந்தி த்துக் கொண்டிருங்கள். ஒழுங்கு முறைகளுக்கு எதிர்த்து நிற்காமல், ஒழுங்கில்லாத வர்களுக்குப் தயவாய் புத்திசொல்லுங்கள்.

**ஜெபம்**: யாவற்றையும் ஒழுங்காகவும் சிறப்பாகவும் செய்து முடிக்கும் தேவனே, நான் ஒழுங்கு முறைகளுக்கு எதிர்த்து நிற்காமல், ஒழுக்க முள்ளவைகளையே எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஒழுங்கு மீறி நடப்பவர்கள்

அந்த மனிதனானவன் சபையின் ஒழுங்கு முறைகளை மீறி நடக்கின் றான் என்று யாவரும் அறிந்திருக்கின்றார்கள். அதை நீங்களும் அறிந்தி ருக்கின்றீர்கள். ஏன் அவனுக்கு எதிராக நடவடிக்கையொன்றும் எடுக் காமல் இருக்கின்றீர்கள் என்று ஒரு விசுவாசியானவன் சபையின் மேய்ப் பரிடம் முறையீடு செய்தான். அதற்கு மேய்ப்பரானவர் அவனை நோக்கி: தம்பி, அவன் ஒழுங்கற்று நடக்கின்றான் என்று எனக்கு நன்றா கத் தெரியும். அவனுடைய நடை முறைகளைக் குறித்து அவனோடு அநேகந்தரம்தயவாய் பேசி, சபை யின் ஒழுங்கு முறைகளை கூறி, வேதம்கூறும் ஆலோசனைகளை யும் அவனுக்கு அறிவித்திருக்கி ன்றேன். சிலமுறை அவனை கடி ந்துகொண்டு, அவனுடைய நடை முறையால் வரப்போகும் பின்விளைவுகளை அறிவித்திருக்கின்றேன். ஆனாலும், அவன் அதை கேட்க மனதில்லாதவனாக வாழ்ந்து வருகின் றான். மனிதர்களுக்கு தண்டனைகள் வழங்குவதற்கும், சிறையில் போடு வதற்கும் நாங்கள் நீதிபதியோ, பொலிசாரோ அல்ல. அவனை நாங்கள் இப்போது கர்த்தரிடம் ஒப்புக்கொடுத்து, அவனுக்காக ஜெபித்து வரு கின்றோம். ஒருவனும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு ஆண்டவராகிய இயேசு தம்மைப் பலியாக ஒப்புக் கொடுத்தார். எனவே கொஞ்சம் பொறுமையாக சகித்துக் கொள். நல்ல கனி கொடாத மரங்களெல்லாம் வெண்டுண்டு அக்கினியிலே போடப்படும். அவனு டைய கனியற்ற வாழ்க்கையை நீ கண்டு, மாம்சத்தின் கிரியையாகிய கசப்பை உன் உள்ளத்திலே வைத்துக் கொள்ளாதே. ஒழுங்கை மீறி நடக்கின்றபடியால், நீயும் ஒழுங்கை மீறிவிடாதபடிக்கு எச்சரிக்கையா யிரு என்றார். பிரியமானவர்களே, ஒழுங்கு முறைகள் எத்தனையிருந்தா லும், ஒழுங்கற்று நடக்க மனதாயிருக்கின்றவர்கள், ஒழுங்குகளை அசட்டை செய்வார்கள். பரிசுத்தத்தை குறித்து மனதாயிருக்கின்றவர்கள், ஒழுங்கற்ற இடங்களிலும் கூட, பரிசுத்தமாக இருக்க நாடுவார்கள். கர்த்தரோடு இருந்த சீஷர்களில் சிலர தவறிப்போன நேரங்கள் உண்டு. அவர்க ளில் பிரதான சீஷனாகிய பேதுரு மனந்திம்பியது போல, மற்றவர்களும் மனந்திருப்ப வேண்டும் என்ற நல் எண்ணத்துடன் நாம் வாழவேண்டும். நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிர யோஜனப்படுத்திக்கொள்ளுங்கள். பக்திவிருத்தியல்லாத புத்தியீனமான பேச்சுகளை விட்டுவிட்டு, ஜெபத்திலே தரித்திருப்போமாக.

**எபேசியர் 5:17**

ஆகையால், நீங்கள் மதியற்ற வர்களாயிராமல், கர்த்தரு டைய சித்தம் இன்னதென்று உணர்ந்துகொள்ளுங்கள்.

**ஜெபம்:** பரலோக தேவனே, கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்ப டாமல், அவைகளைக் கடிந்துகொண்டு, உமக்கு பிரியமானது இன்ன தென்று சோதித்து பார்த்து, உம்முடைய வழியிலே நடக்க கிருபை செய்வீராக. இரட்சகர்இயேசுவழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# சகிப்புத்தன்மையுடைவர்கள்

பிள்ளைகள் படித்து வரும் பாடசாலைகளிலும், நாங்கள் வேலை செய்யும் இடங்களிலும், காலத்திற்கு காலம் ஒழுங்கு முறைகளை மாற்றி, புதிய சட்டங்களை அறிமுகப்படுத்துகின்றார்கள். அண்மைக்காலங்களிலே கைத்தொலைபேசி சாதனம், மாணவர்கள் மத்தியிலே பரவலாக உபயோகிக்கப்பட்டு வருவதால், சில நாடுகளிலே, மாணவர்கள் அதனை பாடசாலை வகுப்புக்களுக்கு கொண்டு வரமுடியாது என்று தடைச் சட்டங்களை அமுல்படுத்தி வருகின்றார்கள் என்று, செய்திகள் வாயிலாக அறிகின்றோம். அதுமட்டுமல்லாமல், இன்றைய நாட்களிலே தேவவார்த்தையானது, பாவம் என்று கூறுகின்ற காரியங்களையும் சிலர் நன்மையென்று கருதி, பாவமான காரியங்களையும் புதிய ஒழுங்கு முறைகளாகவும், சட்டதிட்டங்களாகவும் அமுல்படுத்தி வருகின்றார்கள். அவைகள் மனிதர்களுக்கு நன்மையானவைகள் என்று எண்ணுகின்றார்கள். சில தேவ பிள்ளைகளும் இவைகளில் இழுப்புண்டு போய்விடுகின்றார்கள். இப்படியாக மாறிக் கொண்டிருக்கும் உலகிலே, பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக் கல்வி கற்கும்படியாக பாடசாலைக்கு தவறாமல் அனுப்பி வைக்கின்றார்கள். அப்படியாகவே கோணலும் மாறுபாடுமான உலகிலே பிழைப்புக்காக பல்தரப்பட்ட வேலைகளை செய்துவருகின்றோம். ஊக்கமாக கல்வி கற்க வேண்டும், நன்றாக உழைக்க வேண்டும் என்ற காரணங்களினாலே எல்லா ஒழுங்கு முறைகளையும், ஒழுங்கீனங்களையும், சட்டதிட்டங்களையும், சட்டவிரோதமான செயல்களையும் காணும்போது, அவைகளால் தங்களை கறைப்படுத்திக் கொள்ளாமல், அவைகளை சகித்துக் கொள்கின்றோம். ஆனால், அதே மனிதர்கள், தேவசபைகளிலே நன்மை கருதி அமுல்படுத்தப்படும் ஒழுங்கு முறைகளை குறித்து எதிர்த்து விவாதம் செய்வதற்கு எப்போதும் ஆயத்தமுள்ளவர்களாகவே இருக்கின்றார்கள். சிலவேளைகளிலே, சபைகளிலே விசுவாசிகள் மத்தியிலே சில குறைகளை காணும்போது, சகித்துக் கொள்ள முடியாமல் விசனமடைந்து குழப்பங்களையும், கலகங்களையும்,பிரிவினைகளையும் சிலர் ஏற்படுத்தி விடுகின்றார்கள். பிரியமானவர்களே, இந்த உலகத்திலுள்ள அழிந்து போகின்ற ஐசுவரியத்திற்காக பிரயாசப்படுவதைவிட மிக அதிகமாக நித்திய வாழ்விற்காக பிரயாசப்படுங்கள். நீடிய பொறுமையோடு முன்னேறிச் செல்லுங்கள்.

**கொலோசெயர் 3:13**

**ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர்பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.**

**ஜெபம்**: பரிசுத்தமாகிறவன் இன்னும் பரிசுத்தமாகட்டும் என்று சொன்ன தேவனே, கறைதிறையற்ற பிள்ளைகளாக உமக்கு முன்பாக நிற்கும் நாள் வரைக்கும் பொறுமையோடு முன்னேற கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

📖 மாலை வாசகம் – லூக்கா 5:31 – 32

# இயேசுவின் நண்பர்கள் யார்?

இயேசு இந்த உலகத்திலே வாழ்ந்த நாட்களிலே, ரோமருக்காக வரி வசூலிப்பவர்கள், அநியாயக்காரரும், பறிகாரரும், துரோகிகளும் என்று யூதரால் கருதப்பட்டார்கள். ஒரு சமயம் மத்தேயு வீட்டிலே இயேசு போஜனபந்தியிருக்கையில், அநேக வரி வசூலிப்பவர்களும், பாவிகளும் அவரோடுகூட வந்திருந்தபடியால், அவர்களும் இயேசுவோடும் அவர் சீஷரோடுங்கூடப் பந்தியிருந்தார்கள். அதைக் கண்ட வேதபாரகரும் பரிசேயரும், இயேசுவின் சீஷரை நோக்கி: உங்கள் போதகர் வசூலிக்கின்றவர்களோடும், பாவிகளோடும் போஜனபானம் பண்ணுகிறதென்னவென்றுகேட்டார்கள். இயேசு அவர்களை நோக்கி: பிணியாளிகளுக்கு வைத்தியன் வேண்டியதேயல்லாமல் சுகமுள்ளவர்களுக்கு வேண்டியதில்லை. நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார். இந்த சம்வத்திலே காணப்படும் நீதிமான்கள் யார்? பாவிகள் யார்? சற்று சிந்தித்துப் பாருங்கள். ஆண்டவர் இயேசுவை தவிர இந்த சம்பவத்திலே காணப்படும் யாவரும் பாவிகளாக இருந்தார்கள். ஆனால், வரி வசூலிப்பவர்களும், மற்றய பாவிகளும் தங்களை பாவிகள் என்று ஏற்றுக் கொள்ளும் மனதையுடையவர்களாக இருந்தார்கள். ஆனால், வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளாக இருந்த பரிசேயரும், வேதபாரகரும் தங்கள் பரிதாப பாவ நிலைமையை உணராதபடிக்கு, தங்கள் இருதயத்தை கடினப்படுத்தி, தங்களை நீதிமான்களாக காண்பித்தார்கள். அதனால், ஆண்டவர் இயேசு அவர்களை மிகவும் கடினமாக கண்டித்துப் பேசினார். எனவே, ஆண்டவராகிய இயேசு பாவிகளின் நண்பன் அல்ல. அப்படியானால் கொடும் பாவிகளாக இருந்த பரிசேயர் வேதபாரகரோடும் அவர் நட்பாக இருந்திருப்பார். பாவிகள் தங்கள் பாவத்தில் வாழாமல், மனந்திரும் பும்படிக்கு அவர்களை அழைத்தார். நாம் ஆண்டவர் இயேசுவின் நண்பனாக இருக்க கூடுமோ? ஆம், நாம் ஆண்டவர் இயேசுசின் நண்பனாக இருக்க முடியும். எப்படி ஒருவன் அவருடைய நண்பனாக இருக்க முடியும்? ஆண்டவர் இயேசு கற்பிக்கிற யாவையும் செய்கின்றவர்கள் அவருக்கு நண்பர்களாக இருக்கின்றார்கள் என்று ஆண்டவர் இயேசு கூறியிருக்கின்றார். எனவே, பாவத்திலே தரித்திருக்காமல், அவருடைய வார்த்தையின் வழியிலே வாழ ஒப்புக் கொடுங்கள்.

**யோவான் 15:14**

நான் உங்களுக்குக் கற்பிக்கிறயாவையும்நீங்கள் செய்வீர்களானால், என் சிநேகிதராயிருப்பீர்கள்.

**ஜெபம்:** பாவிகள் மனந்திரும்பும்படி அழைக்கின்ற தேவனே, நான் தங்கள் மனதை கடினப்படுத்திய பரிசேயர், வேதபாரகரைப்போலவாழாமல், பாவங்களை அறிக்கையிட்டு விட்டுவிடுகின்றவனாக வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# யார் பாவிகள்?

ஆண்டவராகிய இயேசு பாவிகளோடு கூட்டுறவு கொள்ளும்படி இந்த உலகத்திற்கு வரவில்லை. மாறாக பாவிகள் தங்கள் நிலைமையை உணர்ந்து, மனந்திரும்பி, புதிய வாழ்வு வாழும்படி அவர்களுக்கு வழியை காட்டும்படி வந்தார். பாவிகள் யார்? 1. மனிதர்களில் சிலர் வெளியரங்கமாக குடித்து, வெறித்து, மனிதர்கள் காணும்படி தகாத காரியங்களிலே ஈடும்படும் போது அவர்கள் பாவிகளும், கீழ்தரமானவர்களும் என்று அழைக்கப்பட்டார்கள். (லூக்கா 5:30) 2. ஏரோது ராஜா மற்றும் பல அதிகாரிகள் பெரும் மாளிகைக்குள்ளே வாழ்ப்பவர்கள், யாரும் அறியாமல் களியாட்டங்களிலும், விபசாரங்களிலும் வாழ்ந்து வந்தாலும் அவர்கள் மக்கள் மத்தியிலே சன்மார்க்களைப் போல காணப்பட்டார்கள். 3. வேறு சிலர், ஆலயங்களிலே முக்கிய ஆசனங்களிலே அமர்ந்திருந்து, மிகவும் கொடுமையான பெருமையுள்ள நெஞ்சம் கொண்டவர்களாக, தங்களை நீதிமான்களாக காண்பித்தார்கள். (யோவான் 9:41). மேற்குறிப்பிட்ட குழுக்களில் ஐசுவரியவான்களும், சாராசரி வருமானமுடையவர்களும், ஏழைகளும் அடங்கியிருந்தார்கள். இவர்கள் யாவரும் பாவிகளாகவே இருந்தார்கள். எல்லாரும் பாவஞ் செய்து, தேவமகிமையற்றவர்களானார்கள் ஆனாலும் எல்லாரும் கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக்கொண்டு நீதிமான்களாக்கப்படும்படி தேவ கிருபையானது வெளிப்பட்டது. (ரோமர் 3:23-24). முதலாவதாக, மனிதர்கள் எந்தக் குழுவை சேர்ந்தவர்களாக இருந்தாலும், தங்கள் ஆத்துமாவிற்கு இரட்சிப்பு அவசியம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அப்படியாக உணர்வடைந்து, மனந்திரும்ப, ஆண்டவர் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்கின்றவர்கள், நீதிமான்களாக மாற்றப்படுகின்றார்கள். இது மனித முயற்சிகளினால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. இப்படியாக நீதிமான்களாக்கப்பட்டவர்கள், திராட்சை செடியாகிய இயேவில் கிளைகளாக இணைக்கப்படுகின்றார்கள். இந்த இணைப்பானது அவர்கள் தங்கள் நாளாந்த வாழ்க்கையில் கொடுக்கும் கனிகளால் உறுதிப்படுத்தப்படும். நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது. கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது. நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும். (மத்தேயு 7:18-19). எனவே நாம் நம்முடைய அழைப்பை உணர்ந்தவர்களாக நம் வாழ்விலே நற்கனிகளை கொடுப்போமாக.

**ரோமர் 3:23**

எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி,

**ஜெபம்**: பரிசுத்த வாழ்வு வாழ என்னை வேறுபிரித்த தேவனே, கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று கனியற்ற வாழ்க்கையை விட்டுவிட்டு, நற்கனிகளை கொடுக்கும்படி என்னை நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நீங்கள் முதிர்ச்சியடைந்தவர்களா?

உயர்தர கல்வியைகற்றுகொண்டிருக்கும் ஒருமாணவனானவன், பல ஆண்டுகளுக்கு பின்பு, தன் பாலர் வகுப்பு ஆசிரியை காணும்படி சென்றிந்தான். புதிய ஆண்டின் ஆரம்ப நாட்களாக இருந்தபடியால், பல புதிய பிள்ளைகள் பாலர் வகுப்பிலே சேர்க்கப்பட்டிருந்தார்கள். அவர்களில் சிலர், பிடிவாதமாக அழுது கொண்டிருந்தார்கள். வேறு சிலர், சக மாணவர்களைபற்றி முறையீடு செய்து கொண்டார்கள். இன்னும் சிலர், அங்குமிங்குமாய் ஓடி பல குழப்பங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். சிறிது நேரம் அதை பார்த்துக் கொண்டிருந்த உயர்தர மாணவனானவன், ஆசிரியையை நோக்கி: டீச்சர், இவர்களை நீங்கள் செம்மையாக தண்டித்து, ஒழுங்குபடுத்த வேண்டும் என்று கூறினான். அதை கேட்ட அந்த ஆசிரியை, சிரித்துவிட்டு, மகனே, இவர்கள் வீட்டிலிருந்து, வெளி உலகத்திற்கு வந்து ஒரு சில வாரங்கள்தான் கடந்திருக்கின்றது. தங்கள் சொந்த வீட்டிலே தாங்கள் நினைத்தபடி காரியங்களை செய்திருப்பார்கள். எனவே, மற்றவர்களோடு சேர்ந்து வாழ்வதற்கு அவர்கள் பழகிக் கொள்ள கொஞ்சம் காலம் எடுக்கும். படிப்படியாக, பொறுமையோடு அவர்களுக்கு கற்றுக் கொடுத்து, நெறிப்படுத்த வேண்டும். பல ஆண்டுகளுக்கு முன், நீ இவர்களைவிட அதிக புரளிகளை பண்ணி னாய். ஆனால், இன்று நீ எப்படியாக முதிர்ச்சியடைந்திருக்கின்றாய் பார். இது பல்கலைக்கழகமல்ல, மாறாக இது பாலர் ஆரம்ப பாடசாலை என்று அவனுக்கு பதிலளித்தார். பிரியமான சகோதர சகோதரிகளே, இத்தகைய செயற்பாடுகளை ஒருவேளை நீங்கள் செல்லும் சபையிலே கண்டிருக்கலாம். அதாவது, ஓய்வுநாள் பாடசாலையில் இருக்கும் சிறுவர்கள் அல்ல. வயது வந்த மனிதர்கள் சிறு குழந்தைகளைப்போல பிடிவாதமுள்ளவர்களாகவும், முறையீடு செய்கின்றவர்களாகவும், அங்கு மிங்குமாய் சென்று குழப்பங்களை ஏற்படுத்துகின்றவர்களுமாய் இருப்பார்கள். ஒருவேளை நீங்கள் இப்போது முதிர்சசியடைந்திருக்கலாம், அப்படியானால், கர்த்தர் நீடிய பொறுமையுள்ளவராக இருப்பது போல, நீங்கள் பொறுமையு ள்ளவர்க ளாக இருங்கள். ஒரு காலத்திலே நீங்களும் அப்படி இருந்தீர்கள் அல்லவா?

**எபேசியர் 4:11**

**மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறி விலும் ஒருமைப்பட் டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும்**

**ஜெபம்**: உம்முடைய குமாரனாகிய இயேவின் சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்த தேவனே, நான் குழந்தைதனமான காரியங்களைவிட்டு, கிறிஸ்து இயேசுவின் சாயலிலே வளரும்படிக்கு எனக்கு கிருபை செய் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

திங்கள் | ஒக்டோபர் 9 | 📖 மாலை வாசகம் – பிலிப்பியர் 2:8

# வாழ்வில் வளர்ச்சி உண்டா?

தன்னுடைய மகனானவன், நெடுஞ்சாலையிலே அவனது மோட்டார் சைக்கிளில் அதிவேகமாக ஓடிச் செல்கின்றான் என்று அறிந்து கொண்ட அவனுடைய தகப்பனானவர், அவனை அழைத்து, மகனே, உன் மோட்டார் சைக்கிளை உன் விருப்பப்படி வாங்கியிருக்கின்றாய். அதிவேகமாக செல்லாதே. கவனமாக ஓட்டிச் செல்லு. சிறிய தவறு பாரிய பாதிப்பை கொண்டு வரும் என்று அறிவுரை கூறினார். அதற்கு அவன்: அப்பா, உங்களுக்கு வயது சென்றபடியால் நான் அதிவேகமாக ஓட்டுவதைப் போல உங்களுக்கு தெரிகின்றது. நீங்கள் ஒருகாலும் மோட்டார் சைக்கிள் ஓடியதில்லையே, உங்களுக்கு அதைப் பற்றி தெரியாது என்று கூறி, மகனானவன் தன் தகப்பனானவரின் அறிவுரையை அலட்சியம் பண்ணிக் கொண்டான். அதைக் கவனித்த தகப்பனானவர் மனமுடைந்து போனதைக் கண்ட தாயார், தகப்பனானவரை நோக்கி: அவன் இப் போது சின்ன பையன் அல்ல. அவன் வளர்ந்து விட்டான். அவனுக்கு இப்போது இருபது வயது என்றாள். அதற்கு தகப்பனானவர்: அவன் சரீரத்திலும், வயதிலும், முதியோரின் ஆலோசனையை அசட்டை பண்ணுவதிலும் வளர்ந்தது உண்மை. ஆனால் அவன் பொறுப்புணர்ச்சியிலோ, கீழ்ப்படிவிலோ வளரவில்லை என்று கூறினார். ஒருநாள் அவன் அதிவேகமாக மோட்டார் சைக்கிளில் சென்றபோது, அதைக் கட்டுப்படுத்த முடியாமல், பெரிதான விபத்தொன்றிலே அகப்பட்டு, கடும் காயங்களுடன் உயிர்தப்பிக் கொண்டான். பிரியமானவர்களே, நீங்கள் ஆண்டவர் இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு எத்தனை வருடங்கள் கடந்து விட்டது? எந்தெந்த காரியங்களில் நீங்கள் வளர்ந்திருக்கின்றீர்கள்? சிலர் பிரச்சனைகளை தீர்த்து வைப்பதிலும், வேறு சிலர் பிரச்சனைகளை உருவாக்குவதிலும் வளர்ந் திருக்கின்றார்கள். இன்னும் சிலர் மன்னிப்பை வழங்குவதிலும், வேறு சிலர் கசப்பை மனதில் வளர்ப்பதில் வளர்ந்திருக்கின்றார்கள். மேலும், வேதத் தின் தியானம், ஜெபம், சபைகூடிவருதல், தான தர்மங்கள் போன்ற காரியங்களில் நீங்கள் வளர்ந்திருக்கின்றீர்களா? வேத கீழ்ப்படிவும், மனத்தாழ்மையும் விருத்தியடைத்திருக்கின்தா அல்லது அந்த வாலிபனைப் போல குறுகியிருக்கின்றதா? நம்முடைய ஆண்டவர் இந்த உலக பெற்றோருக்கும், பரம பிதாவிற்கும் முடிவு பரியந்தமும் கீழ்படிவுள்ளவராகவே இருந்தார்.

**லூக்கா 2:52**

**இயேசுவானவர் ஞானத்திலும், வளர்த்தியிலும், தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும் அதிகமதிகமாய் விருத்தியடைந்தார்**

**ஜெபம்**: தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபை அளிக்கின்ற தேவனே, உம்முடைய வார்த்தைக்கு செவிகொடுப்பதே என் வாழ்வில் முதன்மை யாக இருக்கும்படிக்கு எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# கர்த்தரிடத்திற்கு வழிநடத்துங்கள்

இயேசு யோவானைக்குறித்து ஜனங்களுக்குச் சொன்னது என்ன வென்றால்: எதைப் பார்க்க வனாந்தரத்திற்குப் போனீர்கள்? காற்றினால் அசையும் நாணலையோ? அல்லவென்றால், எதைப் பார்க்கப்போ னீர்கள்? மெல்லிய வஸ்திரந்தரித்த மனுஷனையோ? மெல்லிய வஸ்தி ரந்தரித்திருக்கிறவர்கள் அரசர் மாளிகைகளில் இருக்கிறார்கள். அல்ல வென்றால், எதைப் பார்க்கப்போனீர்கள்? தீர்க்கதரிசியையோ? ஆம், தீர்க்கதரிசியைப்பார்க்கிலும் மேன் மையுள்ளவனையே என்று உங்க ளுக்குச் சொல்லுகிறேன் என்றார். அந்த மேன்மையுள்ள யோவான் ஸ்நானன் மெசியாவாகிய இயேசு வுக்கு வழியை ஆயத்தப்படுத்த வந்தான். அவன் இயேசுவை தன் வாழ்வில் மேன்மைப்படுத்தினான். அவன் இயேசுவை குறித்து கூறும் போது: எனக்குப்பின் வருகிறவர் என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல. அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது. அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார் பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெ ரிப்பார் என்றான். ஆண்டவராகிய இயேசு யோவானால் ஞானஸ்நானம் பெறும்படி யோர்தானுக்கு வந்தபோது, யோவான் அவருக்குத் தடை செய்து: நான் உம்மாலே ஞானஸ்நானம் பெறவேண்டியதாயிருக்க, நீர் என்னிடத்தில் வரலாமா என்றான். மறுநாளிலே யோவானும் அவனு டைய சீஷரில் இரண்டுபேரும் நிற்கும்போது, இயேசு நடந்துபோகிறதை யோவான்ஸ்நானன் கண்டு: இதோ, தேவ ஆட்டுக்குட்டி என்றான். இப்ப டியாக தன்னைப் பின்பற்றி வருகின்றவர்கள் முன்னிலையில் தன்னைத் தாழ்த்தி, அவர்களை ஆண்டவராகிய இயேசுவோடு சேர்ப்பதிலே யோவான் ஸ்நானனின் சந்தோஷம் பூரணமாயிற்று. பிரியமானவர்களே, நாம் ஊழியர்களாக இருந்தாலும், விசுவாசிகளாக இருந்தாலும், நம்மு டைய எல்லைகளை விருத்தி செய்வதிலும், நம்முடைய பெயரையோ, சபையின் பெயரையோ பிரபல்யமாக்குவதிலும் நேரத்தை செலவி டாமல், ஆண்டவர் இயேசுவோடு மற்றவர்களை சேர்ப்பதிலே சந்தோ ஷமடைகின்றவர்களாக இருக்க வேண்டும். இயேசுவோடு சேர்க்காதவன் சிதறடிக்கின்றான். அவரோடு ஒட்டப்படாத கிளை தானாய் கனி கொடு க்க மாட்டது. எனவே நாம் எப்போதும் நம்மைத் தாழ்த்தி, ஆண்டவர் இயேசுவின் நாமத்தை உயர்த்துவோமாக.

**யோவான் 3:30**

**அவர் பெருகவும் நான் சிறு கவும் வேண்டும்.**

**ஜெபம்:** நித்திய வாழ்விற்கென்று என்னை அழைத்த தேவனே, என்னு டைய விருப்பம் அல்ல, உம்முடைய சித்தத்தை நான் நிறைவேற்று கின் றவனாக வாழ தாழ்மையுள்ள இருதயத்தை தந்து வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவனை தேட ஆலயத்திற்கு செல்கின்றவன்

சமுதாயத்தினால் சிறப்பு குடிமகனாக கருதப்பட்ட பரிசேயனும், பாவி யென்று புறக்கணிக்கப்பட்ட ஆயக்காரனும் ஜெபம் பண்ணும்படி தேவ ஆலயத்திற்கு சென்றார்கள் என்று ஆண்டவர் இயேசு கூறிய உவமை யை நீங்கள் யாவரும் அறிந்திருக்கின்றீர்கள் (லூக்கா 18:10-14). தன் நிலை மையை நன்கு உணர்ந்த ஆயக்காரன், ஆலயத்திற்கு கிட்டே செல்ல துணி யாமல், தூரத்திலே நின்றான். அவன் தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு: தேவனே! பாவியாகிய என் மேல் கிருபையாயிரும் என் றான். இந்த மனிதன் ஆலயத் திற்கு சென்ற காரணம் என்ன? அவன் தன்னைத் தானே தேவசமுகத் திலே தாழ்த்தினானா? அல்லது தன் கிரியைகளைக் குறித்து மேன்மை பாராட்டி தன் பாவங்களை நியாயப்படுத்த முயன்றானா? அவனிடம் துணிகரமான பேச்சு? துணிகரமான பார்வை? துணிகரமான சிந்தனைகள் ஏதாவது இருந்ததா? சற்று சிந்தித்துப் பாருங்கள்! பிரியமானவர்களே, துன்மார்க்கத்தில், பாவத்தில் மூழ்கி கிடைப்பவர்களும், சன்மார்க்கரும், தேவனுக்கு பயந்து அவர் வழியிலே வாழ்பவர்கள் யாவரும் தேவ ஆல யத்திற்கு செல்ல முடியும். ஆண்டவராகிய இயேசு ஒருவனும் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு தம்மைத் தாமே பலியாக ஒப்புக்கொடுத்தார். ஆனால், தேவ ஆலயத்திற்கு செல்வதன் நோக்க த்தை அவனவன் ஆராய்ந்து பார்க்க வேண்டும். இன்றைய நாட்களிலே, சிலர் தங்களது வியாபர நலன்களுக்கு வாடிக்கையாளர்களை சேர்த்துக் கொள்வதற்காகவே தேவ ஆலயத்திற்கு செல்கின்றார்கள். வேறுசிலர் திருமணத்திற்காகவும், விசேஷ நிகழ்சிகளுக்காகவும், பொழுது போக் கிற்காகவும் தேவ ஆலயத்திற்கு செல்கின்றார்கள். இன்னும் சிலர், வேறு தகாத நோக்கங்களுக்காக தேவ ஆலயத்திற்கு செல்கின்றார்கள். தேவ ஆலயத்திற்கு சென்று இப்படியாக தேவனுக்கு பயந்து அவர் வழி யில் வாழ தங்களை ஒப்புக் கொடுக்காமல், வேறு நோக்கங்களுக்காக செல்கின்றவர்கள், தங்கள் வழிகளை நியாயப்படுத்த கர்த்தர் வெளி தோற்றத்தையல்ல இருதயத்தையே பார்க்கின்றார் என்று கூறி, வாக்கு வாதங்களையும் விதண்டாவாதங்களையும் உண்டு பண்ணி தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராகி விடுகின்றார்கள். பிரியமானவர்களே, தேவனை தேடுகின்றவனின் உள்ளத்திலே தாழ்மையிருக்கும். அந்த தாழ்மை அவன் கனிகளால் வெளிப்படும். மனந்திரும்புகின்ற எந்தப் பாவியையும் கர்த்தர் ஏற்றுக்கொள்கின்றார். எனவே, எப்பொழுதும் உங்கள் நிலைமையை நன்கு உணர்ந்தவர்களாக தேவ சமுகத்தில் உங்களை தாழ்த்துங்கள்.

**2 கொரிந்தியர் 13:5**

**உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள்.**

**ஜெபம்**: எல்லோரையும் ஏற்றுக் கொள்ளும் தேவனே, என் விசுவாச வாழ்க்கையை நான் உம் வார்த்தையின் வெளிச்சத்தில் சோதித்தறிந்து, உம்மைக் கிட்டிச் சேர உணர்வுள்ள இருதயத்தை தந்து வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

**வியாழன் | ஒக்டோபர் 12** 📖 மாலை வாசகம் - சங் 119:9-10

# தன் குற்றங்களை உணருகிறவன் யார்?

சமுதாயத்தினால் சிறப்பு குடிமகனாக கருதப்பட்ட பரிசேயனானவன் தேவ ஆலயத்திற்கு சென்றான். அவன் பல நன்மையான காரியங்களை தன் வாழ்விலே செய்திருந்தும், தன் உண்மை நிலைதையை உணராதவ னாக தேவனுடைய சமுகத்திற்கு சென்றான். தன்னை நீதிமானென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணுகின்ற இருதயமுடையவனாக அவன் இருந்தான். பல வார்த்தை களைதேவசமுகத்திலே பேசினான். ஆனால், அவனோ பாவியாக தேவ னுடைய சமுகத்திற்கு வந்து, அப் படியே பாவியாகவே வீடு திரு ம்பினான். தன் பிழைகளை உண ருகிறவன் யார்? தன் மறைவான குற்றங்களை அறிகின்றவன் யார்? துணிகரமான பாவத்திற்கும், பெரும் பாதகத்திற்கும் நீங்கலாகியிருப் பவன் யார்? கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர் ப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாய ங்கள் செம்மை யும், இருதயத்தைச் சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறத் கர்த்தருடைய கற்பனை தூய்மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும், என்றைக்கும் நிலைக்கிற துமாயிருக்கிறத் கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியுமாயிருக்கிறது. அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுரமுள்ளதுமாய் இருக்கிறது. அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன் அவைகளைக் கைக்கொள்ளுகிறதினால் மிகுந்த பலன் உண்டு. பிரியமானவர்களே, கர்த்தருடைய வேதமே ஒரு மனுஷனுடைய ஆத்துமாவை உயிர்ப்பிக்க முடியும். அவருடைய வார்த்தைகளே கண்களுக்கு வெளிச்சத்தை கொடுக்கும். அந்த வார்த்தைகளை தன் இருதயத்திலே வைத்திக்கி ன்றவனே உணர்வுள்ள மனுஷனாக இருக்கின்றான். ஒருவேளை நம்முடைய தகுதி தராதரம் இந்த உலகத்தினால் அங்கீகாரம் பெற்றதாக இருக்கலாம். நம்முடைய பேச்சுக்கள் மனிதர்களுடைய பார்வையிலே ஏற்புடையதாக இருக்கலாம். சக விசுவாசிகள் நம்முடைய இருதயத்தின் தியானங்களைக காணாதவர்களாக இருக்கலாம். ஆனால், இருதயங் களை ஆராய்ந்தறிகின்ற தேவன் முன்னிலையிலே நாம் உண்மையுள்ள வர்களாக காணப்படும்படி வேதத்தின் வழியிலே நடப்போமாக.

**சங்கீதம் 19:14**

**என் வாயின் வார்த்தைகளும், என் இருதயத்தின் தியான மும், உமது சமுகத்தில் பிரீ தியாயிருப்பதாக.**

**ஜெபம்**: இளைப்பாறுதல் தரும் தேவனே, உம்முடைய சமுகத்திலே என் வார்த்தைகள் உண்மையாய் இருக்கும்படிக்கு, உம் வார்த்தையின் வழியில் வாழும் உணர்வுள்ள இருதயத்தை எனக்கு தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

**வெள்ளி | ஒக்டோபர் 13** 📖 மாலை வாசகம் – பிலி 3:18–20

# பயபக்தியோடு ஆராதனை செய்யுங்கள்

ஒரு கணக்கியல் நிபுணராக பணியாற்றி வந்த விசுவாசியொருவன், தன் வேலை அலுவலாக ஒரு சிறிய வியாபார ஸ்தாபனத்தின் உரிமையா ளரோடு தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தான். அந்த வேளை யிலே அந்த ஸ்தாபன உரிமையாளர், அந்த விசுவாசியை ஞாயிற்றுக் கிழமை சந்திக்க முடியுமா என்று கேட்டார். அதற்கு அந்த விசுவாசி யானவன்: ஞாயிறு நான் ஆல யத்திற்கு செல்ல வேண்டும். எனவேஇன்னுமொரு நாளிலே சந்திப்போம் என்றான். அதைக் கேட்ட ஸ்தாபனத்தின் உரிமையாளர், உடனடியாக, அப்படியானால், நான் உன்னை ஆலயத்தில் சந்திக்கின்றேன். நான் ஆராதனைக்கு வருகின்றேன் என்றார். தேவனை தேடும்படிக்கு அல்ல, அவர், சபையோர் மத்தியிலே விசுவாசியாக இருந்த கணக்கியல் நிபு ணருக்கு அறிமுகமானவர் என்று காண்பித்து, அந்த செல்வாக்கி னாலே, சபையிலும் தன் வியாபார விற்பனைப் பொருட்களை அறிமு கப்படுத்தலாம் என்ற நோக் கமுடையவராக இருந்தார். அதனால், அந்த கணக்கியல் நிபுணராக இருந்த விசுவாசியானவன், ஸ்தாபன உரிமை யாளரை இன்னுமொரு நாளிலே சந்திக்கும்படி வேண்டிக் கொண்டான். பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று பல இடங்களிலே ஆலய ங்களை தங்கள் சொந்த நோக்கத்திற்காக துஷ்பிரயோகம் செய்யும் மனிதர்கள் பெருகி வருகின்றார்கள். சில விசுவாசிகளும்கூட தங்கள் இழிவான ஆதாயத்திற்காக இத ற்குள் இழுப்புண்டு போய், சபையிலே பல குழப்பங்களை ஏற்படுத்தி விடுகின்றார்கள். ஒரு சமயம் ஆண்டவர் இயேசு பண்டிகையின் நாட்க ளிலே எருசலேம் தேவாலயத்திற்பு சென்ற போது, தேவாலயத்திலே ஆடுகள் மாடுகள் புறாக்களாகிய இவைகளை விற்கிறவர்களையும், காசுக்காரர் உட்கார்ந்திருக்கிறதையும் கண்டு, கயி ற்றினால் ஒரு சவுக் கையுண்டுபண்ணி, அவர்கள் யாவரையும் ஆடுமா டுகளையும் தேவாலயத்துக்குப் புறம்பே துரத்திவிட்டு, காசுக்காரரு டைய காசுகளைக் கொட்டி, பலகைகளைக் கவிழ்த்துப்போட்டு, புறா விற்கிறவர்களை நோக்கி: இவைகளை இவ்விடத்திலிருந்து எடுத்துக் கொண்டுபோங்கள் என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள் என்றார். எனவே, தேவ ஆலயத்திற்கு செல்வதன் முதன்மையானதும் அவசியமானதுமான நோக்கத்தை நீங்கள் அறிந்து பயபக்தியோடு தேவனுக்கு ஆராதனை செய்யுங்கள். உங்கள் கிரியைகளினால் பெலவீ னமுள்ளவர்கள் இடறலடைந்து பின்வாங்கிப் போகாதபடிக் எச்சரிக்கை யுள்ளவர்களாக இருங்கள்.

**யோவான் 2:16**

**என் பிதாவின் வீட்டை வியாபார வீடாக்காதிருங்கள் என்றார்.**

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, பரிசுத்த அலங்காரத்தோடு உம்மை ஆராதிக்கும்படிக்கு, அலங்கோலமானவைகளை உம் ஆலய பிரகாரங் கிலே நடப்பிக்காமலிருக்க எனக்கு கற்று தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நலமானதை எப்படி பற்றிக் கொள்வது?

**1 தெச 5:21**

**எல்லாவற்றையும் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள்.**

தூரத்திலிருக்கும் ஊரொன்றிலிருந்து ஒரு ஸ்திரியானவள், தன் மகனானவனோடு தேவ ஆலயத்திற்கு வந்திருந்தாள். ஆண்டவர் இயேசுவை அறியாத அவர்கள், சில வாரங்கள் ஆராதனைக்கு வந்த பின்னர், சில விசுவாசிகள் அவர்களுடைய நோக்கத்தை அறிந்து கொண்டார்கள். அந்த ஸ்திரியானவளுடைய, மகனானவன் திருமண வயதையுடையவனாக இருந்ததால், அவனுக்கு ஒரு பெண்ணை பார்க்கும்படிக்கு சபைக்கு வந்திருந்தார்கள். ஆலயத்திற்கு செல்லும் பெண்கள் பொதுவாக புருஷனுக்கு கீழ்படிந்திருப்படிந்திருப்பார்கள், எனவே எப்படியாவது ஒரு பெண்ணை பொருத்தம் பார்க்கலாம் என்பதே அந்த ஸ்திரியானவளுடைய நோக்கமாக இருந்தது. திருமணத்திற்காக ஞானஸ்நானம் எடுப்பதற்கோ அல்லது திருமணத்தை சபையிலே வைப்பதற்கோ எந்ததடையும் இல்லை என்றும் கூறியிருந்தாள். மனந்திரும்புதல், பாவ மன்னிப்பு, இரட்சிப்பு, மறுவாழ்வு, தேவனுக்கு பயந்து அவர் வழியில் நடத்தல், நித்திய ஜீவன் இவைகளைக் குறித்த எந்த எண்ணமும் அவளித்தில் இருக்கவில்லை. மனித குலத்திற்கு இரட்சிப்பு இயேசுவால் மட்டுமே உண்டு என்பதை ஏற்றுக் கொள்ளும் மனதுமில்லை. ஆனால், இரட்சிப்படையாத தன் மகனானவனுக்கு ஒரு நல்ல பெண் அமைந்தால் போதும் என்பதே அவளுடைய நோக்கமாக இருந்தது. பிரியமானவர்களே, மனுஷர் நித்திரை பண்ணுகையில் சத்துருவானவன் வந்து, கோதுமைக்குள் களைகளை விதை த்துவிடுகின்றான். சிலர் ஆட்டுத்தோலை போர்த்துக் கொண்டிருக்கும் பட்சிக்கின்ற ஓநாய்களாக இருக்கின்றார்கள். அவர்களுடைய முடிவு அழிவு, அவர்களுடைய தேவன் வயிறு, அவர்களுடைய மகிமை அவர்களுடைய இலச்சையே, அவர்கள் பூமிக்கடுத்தவைகளைச் சிந்திக்கிறார்கள். எனவே, மற்றவர்களுடைய வாழ்க்கையை நீங்கள், அவர்கள் தோற்றம், கல்வி, உத்தியோகம், ஆஸ்தி, குடும்பப் பின்னனியை, சமூக அந்தஸ்துகளை வைத்து நிதானித்து அறியாமல், அவர்களுடைய கனிகளாலே அவர்களை அறிந்து கொள்ளுங்கள். பதட்டப்பட்டு வாழ்க்கையின் முக்கிய தீர்மானங்களை தீவிரமாக எடுக்காமல், பொறுமையுள்ளவர்களாக இருங்கள். தேவ உங்களுக்கு நியமித்த அவருடைய நன்மைகளை அவர் குறித்த காலத்திலே நிறைவேற்றி முடிப்பார். தேவ ஆலோசனையை கூறுபவர்களுக்கு செவிகொடுங்கள். தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் வாழ்வில் முதன்மையாக்கிக் கொள்ளுங்கள். எப்பொழுதும் ஜெபத்திலே தரித்திருங்கள்

**ஜெபம்:** சகலமும் அறிந்து தேவனே, நான் ஒருபோதும் மாம்சத்திலே வாழ்வின் தீர்மானங்களை எடுக்காமல், பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலக எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உண்மையுள்ளவன் யார்?

ஒரு மாலைப் பொழுதிலே, மேய்ப்பரானவரொருவர், தன் உதவி ஊழியக்காரனோடு, ஒரு விசுவா குடும்பத்தின் வீட்டிற்கு சென்றிருந்தார். அவர்களோடு பேசிக் கொண்டிருந்த போது, உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கை எப்படியாக இருக்கின்றது? யாவரும் அனுதினமும் வேதம் வாசிக்கின்றீர்களாக? யாவரும் அனுதினமும் ஜெபிக்கின்றீர்களாக என்று மேய்ப்பரானவர் கேட்டார். அதைக் கேட்ட தாயானவள், அதையெல்லாம் ஏன் கேட்கின்றீர்கள் ஐயா, இங்கு ஒருவரும் அப்படி செய்வதை நான் பல மாதங்களாக காணவில்லை. யாரைக் கேட்டாலும் நேரமில்லை என்று சொல்கின்றார்கள் என்று குடும்பத்தின் ஆவிக்குரிய நிலைமையை விவரித்துக் கூறினாள். அதை பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்த மேய்ப்பரானவர், இந்தக் காரியங்களிலே நீங்கள் முன்னேற வேண்டும் என்று சாந்தத்தோடு கூறி, ஜெபம் செய்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார். போகும் வழியிலே உதவி ஊழியக்காரன் அந்த மேய்ப்பரானவரை நோக்கி: நீங்கள் அவர்களைக் கடிந்து கொண்டு, கண்டனம் பண்ணி, புத்திசொல்வீர்கள் என்று எதிர்பார்த்தேன் ஆனால் அவர்கள் செய்வது சரி என்ற பிரகாரமாக நீங்கள் அவர்களோடு தயவாய் பேசியதை கண்டு நான் ஆச்சரியப்பட்டேன் என்றான். அதற்கு மேய்ப்பரானவர்: அவனை நோக்கி: மகனே, கண்டனத்திற்கும், கடிந்து கொள்ளுதலுக்கும் காலமும் நேரமும் உண்டு. வைத்தியரிடம் சென்று தன் நோய்களை குறித்து கூறுகின்றவர்களை கண்டனம் செய்வதால் அவன் நோய்கள் குணப்படுவதில்லை. வைத்தியர் முதலாவதாக வைத்தியம் செய்கின்றார். அவர்களும் தங்களை நீதிமான்களாக காண்பிக்க விரும்பியிருந்தால், தாங்கள் தவறாமல் வேதம் வாசித்து ஜெபிக்கின்றோம் என்று கூறியிருக்கலாம். அவர்கள் அப்படிச் செய்யாமல், தங்கள் உண்மை நிலைமையை கூறியிருக்கின்றார்கள். அவர்களிடத்திலே உண்மை உண்டு. அவர்களை நாங்கள், மெதுவாக ஆவிக்குரிய வாழ்க்கைக்குள் நடத்த வேண்டும். அவர்கள் வீட்டிற்கு நாங்கள் சென்று சிலஜெபக்கூட்டங்களை வைத்து, அவர்களை ஊக்குவிக்க வேண்டுமென்று கூறினார். பிரியமானவர்களே, வருத்தத்தோடு வாழ்பவன் வைத்தியரிடம் சென்று எனக்கு நல்ல சுகம் என்று கூறினால், வைத்தியர் அவனுக்கு உதவி செய்ய முடியாது. நீங் கள் உண்மையுள்ளவர்களாக இருக்கின்றீர்களா என்று இன்று உங்களை நீங்கள் ஆராய்ந்து பாருங்கள். ஒருவருக்கொருவர் அவயவ ங்களாக இருக்கின்றபடியால், பொய்யை களைந்து உண்மையைப் பேசுங்கள்.

**எபேசியர் 4:25**

**பொய்யைக் களைந்து, அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன்.**

**ஜெபம்:** குணமாக்கும் தேவனே, நான் முற்றிலும் குணப்படும்படி, பொய்யை களைந்து, உம்முடைய சமுகத்திலே எப்பொழுதும் உண்மையுள்ளவனாக இருக்கும்படி எனக்கு பெலன் தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# குறைகளை விமர்சிக்காதிருங்கள்

**யாக்கோபு 5:16**

நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.

எனக்காக ஜெபம் செய்யுங்கள் என்று ஒரு மனிதனானவன், தன் இளம் குடும்பத்திலேயுள்ள சில பிரச்சனைகளை ஒரு மூத்த விசுவாசியினிடத்தில் கூறினான். அந்த மூத்த விசுவாசியானவனோ, தான் அறிந்து கொண்ட அந்த இளம் குடும்பத்தின் பிரச்சனைகளை, வேறு சிலரிடம் கூறி, மற்றவர்களிடமும் தெரியப்படுத்தினான். சீக்கிரமாக அந்த இளம் குடும்பத்தினர், தங்கள் பிரச்சனைகளைக் குறித்து பலர் விமர்சிக்கின்றார்கள் என்பதை அறிந்து கொண்டதினால், மனம் உடைந்து போனார்கள். சபையின் மூப்பர்கள் அந்த மூத்த விசுவாசியை அணுகி விசாரித்த போது, நான் ஜெபம் பண்ணுபடியாகத் தான் அறிந்த பிரச்சனைகளை மற்றவர்களுக்கு கூறினேன் என்று தன்னை நியாயப்படுதினான். ஆனால், அவன் அவர்களுக்காக ஜெபித்த நேரத்தைவிட, அவர்கள் பிரச்சனைகளை மற்றவர்களோடு விமிர்சிப்பதற்கு செலவிட்ட நேரமானது பத்துமடங்கு அதிகமாக இருந்தது. கிறிஸ்வின் சரீரமான சபையின் அவயவங்ளாக இருக்கும் சகோதர சகோதரிகளே, நாம் ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுகின்றவர்களாக இருக்க வேண்டும். உங்களுடைய பிள்ளைகைளுடைய பிரச்சனைகளை மற்றவர்கள் விமர்சித்து திரிந்தால் நீங்கள் அதை ஏற்றுக் கொள்வீர்களா? எனவே, உன்னைப் போல உன் அயலானை நேசி என்பதன் பொருளை அறிந்து கொள்ளுங்கள். இப்படியாக, வம்பும், புத்தியீனமுமான பேச்சை பேசுகின்றவர்கள் ஆங்காங்கே இருக்கின்றார்கள். அவர்கள் தேவனை அறிய வேண்டிய பிரகாரமாக இன்னும் அறியவில்லை. அவர்கள் தங்கள் கிரியைகளுக்குரிய பின்விளைவுகளை சந்திக்கும் காலம் வரும். அதனால், நீங்கள் உங்கள் விண்ணப்பங்களை உண்மையாக ஜெபிப்பவர்களிடம் தெரியப்படுத்தாது இருந்து விடாதிருங்கள். ஆண்டவர் இயேசு வின் இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கின்ற அருமையான சகோதர சகோதரிகளே, இருதயங்களை ஆராந்தறிகின்றவர் உங்கள் சிந்தைகளை அறிகின்றவராகையால்,மற்றவர்களுடைய குறைகளை விமர்சிப்பவர்களுக்கு செவி கொடுக்காமல், அவர்களோடு பங்காளிகளாயிராமல், பரலோக ராஜ்யத்தின் பங்காளிளாகயிருந்து, தேவவார்த்தைக்கு கீழ்படிகின்றவர்களாக, மனத்தாழ்மையோடு ஒருவருக்காக ஒருவர் ஊக்கமாக ஜெபம் செய்யுங்கள்.

**ஜெபம்**: அன்பின் தேவனே, எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணும் ஞானமுள்ள இருதயத்தை எனக்கு தந்து என்னை வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

செவ்வாய் | ஒக்டோபர் 17

📖 மாலை வாசகம் – யாக் 3:9–11

# விசுவாசத்திற்கு விரோதமான பேச்சுக்கள்

சில வேளைகளிலே தேவ பிள்ளைகள் விசுவாசத்தோடு ஊக்கமாக ஜெபிக்கின்றார்கள். ஆனால், தாங்கள் விசுவாசித்த காரியமானது கைகூடி வரும்போது அதை நம்பமுடியாமல் சந்தேகம் கொள்கின்றார்கள் அல்லது ஜெபம் ஏறெடுக்கப்பட்ட அதே நாவினாலே, ஜெபித்த பின்னர் தங்கள் விசுவாச அறிக்கைக்கு விரோதமாக எதிரான வார்த்தைகளை அறிக்கையிட்டு கொள்கின்றார்கள். அக்காலத்திலே, ஏரோது ராஜா சபையிலே சிலரை துன்பப்படுத்த தொடங்கி, யோவானின் சகோதரனாகிய யாக்கோபை பட்டயத்தினால் கொலை செய்தான். அது யூதருக்குபிரிமாக இருந்தது என்று அவன் கண்ட போது, ஆண்டவர் இயேசுவின் பிரதான சீஷனாகிய பேதுருவை பிடித்து, கொலை செய்ய மனதாய், பண்டிகை நாட்கள் முடியும்வரைக்கும், இரண்டு சங்கிலிகளால் கட்டி, கடும் காவலிலே வைத்தான். அப்பொழுது, மாற்கு என் னும் பேர் கொண்ட, யோவானுடைய தாயாகிய, மரியாள் வீட்டிலே அநே கர் கூடி ஊக்கமாக ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்கள். பேதுருவின் விடுதலைக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே அவர்கள் ஜெபம்பண்ணினார்கள். ஏரோது அவனை வெளியே கொண்டுவரும்படி குறித்திருந்த நாளுக்கு முந்தின நாள் இராத்திரியிலே, கர்த்தருடைய தூதன் சிறைச்சாலையில் வந்து நின்று, அதிசயவிதமாக பேதுருவை விடுதலையாக்கினான். பேதுரு மாற்குவின் தாயாரின் வீட்டிற்கு வந்து கதவை தட்டியபோது, ரோதை என்னும் பேர்கொண்ட ஒரு பெண் பேதுருவின் சத்தத்தை அறிந்து சந்தோஷ த்தினால் கதவைத் திறவாமல், உள்ளேயோடி, பேதுரு வாசலுக்கு முன்னே நிற்கிறார் என்று அறிவித்தாள். ஜெபித்துக் கொண்டிருந்த வர்கள்: நீ பிதற்றுகிறாய் என்றார்கள் தாங்கள் விசுவாசத்தோடு ஊக் கமாக ஜெபித்த காரியம் கைகூடியபோது நம்ப முடியாமல் சந்தே கப்பட்டார்கள். பேதுரு பின்னும் தட்டிக்கொண்டிருந்தான். அவர் கள் திறந்தபோது பேதுருவைக் கண்டு பிரமித்தார்கள். சபையோரே, ஊக் கமாக ஜெபம் பண்ணுங்கள். விசுவாச அறிக்கை எப்போதும் உங்கள் வாயிலிருப்பதாக. சந்தேகங்களுக்கு உங்கள் சிந்தையிலே இடம் வேண் டாம். வேத வார்த்தைகளை அறிக்கையிடுங்கள். ஒருமன தோடு விண் ணப்பங்களை ஏறெடுங்கள். நம் ஜெபங்களை கேட்கின்றவர் நம்மோடு இருக்கின்றார்.

**அப்போஸ்தலர் 12:5**

**சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினார்கள்.**

**ஜெபம்**: ஒரு தகப்பனானவனைப் போல நேசிக்கும் தேவனே, சிறு பிள்ளை களைப் போல கிறிஸ்துவுக்குள் வளர்ந்து வரும் மனிதர்கள்மேல் பொறுமையாக இருக்கும்படிக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# ஐக்கிய விருந்து

ஒரு சனசமூக நிலையமொன்றிலே சமுகத்தின் ஐக்கிய விருந்தொன்றை வைப்பதற்காக தீர்மானம் செய்திருந்தார்கள். அந்தத் தீர்மானத்தின்படி சில உறுப்பினர்கள், அந்த விருந்துக்குரிய ஆயத்தங்களை துரிதமாக செய்து வந்தார்கள். எப்படிப்பட்ட உணவு வகைகளை தெரிவு செய்ய வேண்டும் என்று அவர்கள் கலந்துரையாடின போது, சில உறுப்பினர்களுக்கிடையே கருத்து முரண்பாடுகளும், வாக்குவாதங்களும் உண்டாயிற்று. ஐக்கிய விருந்தின் நாட்கள் நெருங்கிய போது, நிகழ்ச்சி நிரல் எப்படியாக இருக்க வேண்டும் என்ற சம்பாஷைனை யில் உறுப்பினர்கள் மூன்று பிரிவாக பிரிந்து விட்டார்கள். இரண்டு பிரிவினர் ஒருவருக்கு ஒருவர் விரோதமான கருத்துக்களுள்ளவர்களாகவும், மூன்றாவது பிரிவினர் இந்த இரண்டு பிரிவினரோடு சேராதவர்களாகவும் இருந்தார்கள். எனினும், சமூகம் என்ன சொல்லும் என்று கூறி, பிரிவினைகளை தங்கள் உள்ளத்திலே வைத்துக் கொண்டு, விருந்தை வெற்றிகரமாக நடத்தி முடித்தார்கள். அந்த விருந்தின் முடிவிலே, இந்த ஐக்கிய விருந்து அருமையாக இருந்தது என்று சிலர் பாராட்டினார்கள். நடந்த விவகாரங்களை அறிந்த முதியவரொருவர், விருந்து அருமையாகத்தான் இருந்தது. ஆனால் ஐக்கியத்திற்கு இங்கே இடமில்லை என்று கூறினார். ஆம், பிரியமானவர்களே, சபையிலே நாம் ஐக்கியத்தைக் மேன்மைப்படுத்தி கூறுகின்றோம். ஐக்கிய விருந்துகளிலே பங்குபற்றுமாறு, சபையோருக்கும் விருந்தினருக்கும் அழைப்பு விடுக்கின்றோம். ஆனால், விசுவாசிகள் மத்தியிலே இருக்கும் ஐக்கியம் உண்மையுள்ளதாக இருக்கின்றதா என்பதை அவரவர் ஆராய்ந்து பார்க்க வேண்டும். நீங்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து, என் சந்தோஷத்தை நிறைவாக்குங்கள். ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள் என்று பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கின்றோம். முதலாவதாக ஒவ்வொருவரும் கிறிஸ்துவோடு ஐக்கியமுள்ளவர்களாக இருக்க வேண்டும். கிறிஸ்துவோடு இசைந்திருக்கின்றவர்களிடத்தில், கிறிஸ்துவிலிருந்த சிந்தை நிறைவாக இருக்கும். அப்பொழுது அவர்கள் ஏக சிந்தையும் ஏக அன்புமுள்ளவர்களாயிருந்து, இசைந்த ஆத்துமாக்களாய், ஒன்றையே சிந்தித்து, தங்களுக்குரியவைகளை நோக்காமல், பிறருக்கானவைகளை நோக்குவார்கள். அவர்களிடத்தில் உண்மையான ஐக்கியம் உண்டாயிருக்கும்.

**பிலிப்பியர் 2:2**

**இசைந்த ஆத்துமாக்களாய் ஒன்றையே சிந்தித்து**,

**ஜெபம்**:ஐக்கியமுள்ளவர்களாக இருக்கும்படி என்னை அழைத்த தேவனே, நான் இந்த உலகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படும் ஐக்கியத்தில் திருப்தியடையாமல், உம்மோடு ஐக்கியமுள்ளவனாக இருக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தேவனுடைய கற்பனைகள்

சவுல் ராஜா அரசாண்ட இரண்டாம் வருஷத்திலே, எதிரிகளாகிய பெலிஸ்தியர் இஸ்ரவேலுக்கு எதிராக யுத்தம் செய்தார்கள். இஸ்ரவேலர் மிகுந்த வருத்தம் அடைந்தார்கள். அதனால் நான் என் சத்துருக்கள் கையிலே பழிவாங்க வேண்டும், சாயங்காலமட்டும் பொறுக்காமல் எவன் போஜனம் செய்கிறானோ அவன் சபிக்கப்பட்டவன் என்று சவுல் ராஜா ஜனங்களுக்கு ஆணையிட்டுச் சொல்லியிருந்தபடியால், ஜனங்களில் ஒருவரும் எவ்வளவேனும் போஜனம்பண்ணாதிருந்தார்கள். ராஜாவின் கட்டளையை அறியாதிருந்த அவனுடைய குமாரனாகிய யோனத்தான், அன்றைய தினம் அவன் தன் கையிலிருந்த கோலை நீட்டி, அதின் நுனியினாலே தேன்கூட்டைக் குத்தி, அதை எடுத்துத் தன் வாயிலே போட்டுக் கொண்டான். அதை அறிந்த ராஜா அவன் தன் குமாரன் என்றும் பாராமல், ராஜ கட்டளையை மீறினபடியால் அவன் சாக வேண்டும் என்று கூறிக் கொண்டான். ஆனால், ஒன்றுமில்லாதிருந்த அவனை சமஸத இஸ்ரவேலுக்கும் ராஜாவாகி, உயர்த்தி வைத்த, சர்வவல்லமையுடைய தேவனாகிய கர்த்தரின் கட்டளையை அவன் அசட்டை பண்ணி, மீறி நடக்கின்றவனாக இருந்தான். அது மட்டுமல்லாமல், தன் மீறுதல்களை ஏற்றுக் கொள்ளாமல் அவைகளை நியாயப்படுத்துகின்றவனுமாக இருந்தான். நாம் யாவரும் தேவனை அறியாத நாட்களிலே, இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டோம். அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். நம்மில் அன்புகூர்ந்த பிதாவாகிய தேவனோ, கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மை அவரோடேகூட எழுப்பி, உன்னதங்களிலே அவரோடேகூட உட்காரவும் செய்தார். கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. கிறிஸ்துவிலிருந்த ஆவியை அவர் நமக்கு கொடுத்து, நம்மை தம்முடைய குமாரரும் குமாரத்திகளுமாக ஏற்றுக் கொண்டார். எனவே, நாமும் சவுல் ராஜாவை போல மீறுதல்களை நியாயப்படுத்தாமல், தேவனுக்கு பிரியமுள்ள பிள்ளைகளாக அவருடைய கற்பனைகளை மனதார கைகொள்வோமா.

**1 யோவான் 5:3**

அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல.

**ஜெபம்**: அன்பின் பரலோக தகப்பனே, இத்தனை மகத்துவமுள்ள பதவியை நீர் எனக்கு கொடுத்திருக்கின்றீர். அதை உணர்ந்து, உம்முடைய சித்தத்தை நிறைவேற்றுகின்றவனாக வாழ உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

**வெள்ளி | ஒக்டோபர் 20** | 📖 மாலை வாசகம் – எபே 6:10 – 13

# தேவ கிருபையை அசட்டை செய்யாதிருங்கள்

விலைவாசிகள் உயர்ந்து கொண்டிருக்கும் இந்த உலகிலே, தரமான பொருட்களை மலிவாக கொள்வனவு செய்வதற்காக, மனிதர்கள் இன்று இணையத்தளத்திற்கு சென்று, எங்கே பொருட்களை தரமானதாக, மலிவானதாக, குறைந்த நேரத்தில் வாங்கலாம் என்று தேடுகின்றார்கள். அவைகளில் அதிகமானவைகள் உயிர்வாழ்வதற்கு அத்தியாவசியமான பொருட்கள் அல்ல. இந்த கிழமை ஒரு இடத்திலே மலிவு விற்பனை அங்கே வாங்கலாம், அடுத்த கிழமை இன்ன இடத்திலே மா பெரும் மலிவு விற்பனை அங்கே போகலாம் என்று அங்கும் இங்குமாக அலைந்து திரிகின்றார்கள். இவ்வண்ணமாகவே சிலர் தங்கள் வாழ்க்கையை இந்த உலகத்திலே பரப்பரப்பாகவும், அவசரவசரமாகவும், பல சோலிகளோடு வாழ்ந்து வருகின்றார்கள். அவைகள் மத்தியிலே, எப்படியாவது ஆலயத்திற்கு போய்விட வேண்டும் என்று, மலிவு விற்பனையில் பொருட்களை கொள்வனவு செய்வது போல, சிரமங்கள் இன்றி, சீக்கிரமாக சென்றுவரக்கூடிய ஆராதனைகள் எங்கே நடக்கின்றது என்று தேடுகின்றார்கள். இப்படிப்பட்டவர்கள், பக்திவிருத்தி, சீர்பொருந்துதல், அர்ப்பணிப்பு, ஐக்கியம் இவைகளை குறித்த உணர்வு இல்லாமல் வாழத் துணிகின்றார்கள். இவைகளை காணும் பக்தியுள்ள சில தேவ பிள்ளைகளும், தங்கள் வாழ்விலே போராட்டங்கள் ஏற்படும் போது, அவர்களைப் போல நாமும் வாழ்ந்து விட்டுப் போனால் நல்லது என்று எண்ணுகின்றார்கள். பிரியமானவர்களே, போராட்டம் இல்லாத கிறிஸ்தவ வாழ்வு இல்லை. (எபேசியர் 6:12-13) கோணலும் மாறுபாடுமான உலகிலே நாம் வாழ்கின்றோம். கோதுமை மத்தியிலே சில களைகளும் விதைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. எனவே நாம் எங்கு சென்றாலும் பிசாசின் தந்திரகளோடு நமக்கு போராட்டம் உண்டு. ஆனால், அவைகளை முற்றும் ஜெயங்கொள்ளும்படிக்கு தேவ ஆவியானவர்தாமே நம்மோடு எப்போதும் இருக்கின்றார். விலை கொடுத்து வாங்க முடியாத, தம்முடைய பரிசுத்த இரத்தத்தினாலே ஆண்டவராகிய இயேசு நம்மை மீட்டுக் கொண்டார். மலிவு விற்பனை போல அந்த மகத்துவமுள்ள மீட்பை அசட்டை செய்யாமல், முதலாவதாக, ஊக்கத்தோடு தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள்.

**ரோமர் 3:24**

**இலவசமாய் அவருடைய கிருபையினாலே கிறிஸ்து இயேசுவிலுள்ள மீட்பைக் கொண்டு நீதிமான்களாக்கப்படுகிறார்கள்;**

**ஜெபம்**: விலைமதிக்க முடியாத அருமையான மீட்ப்பை எனக்கு தந்த தேவனே, இந்த மகத்துவமுள்ள இரட்சிப்பை இந்த உலக பொருட்களைப் போல கருதாமல், எல்லாக் காவலோடும் அதை காத்துக் கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

| சனி \| ஒக்டோபர் 21 | 📖 மாலை வாசகம் – மத்தேயு 25:1 –13 |
| --- | --- |

# கொஞ்சக் காலம்தான்

**வெளிப்படுத்தல் 1:3**

**காலம் சமீபமாயிருக்கிறது.**

நாளை ஞாயிற்றுக் கிழமையோடு, இந்த ஊருக்கு வருகை தந்திருக்கும் அந்தப் பிரபல்யமான பாடகர்களின் இசைக் கச்சேரி நிறைவு பெறும். இன்னும் கொஞ்ச நேரம்தான் இருக்கின்றது. இப்படியான சந்தப்பங்கள் உன் வாழ்வில் இனி வருமோ தெரியாது. எனவே, நீ என்னோடு வா என்று ஒரு நண்பனானவன், உயர்தர வகுப்பில் படிக்கும் மாணவனொருவனை வருந்தி அழைத்துக் கொண்டிருந்தான். அந்த வாலிபனோ, நண்பா: இசைக் கச்சேரி நிறைவடைய இன்னும் கொஞ்ச நேரம் தான் இருக்கின்றது. அது போலவே, எங்களுடைய முக்கிய பரீட்சை நாளுக்கும் இன்னும் கொஞ்ச நேரம் தான் இருக்கின்றது. எனவே, நாங்கள் இந்தப் பருவத்திலே, நேரத்தை விரயமாக்காமல், பரீட்சைக்கு ஆயத்தப்படுவதே எங்களுக்கு அவசியமானது என அவனுக்கு மறுமொழி கூறினான். இவ்வண்ணமாகவே உலகம் இன்று நம்மை அழைக்கின்றது. வாழ்க்கின்ற நாட்களிலே என்னத்தை கண்டீர்கள்? என்னத்தை அனுபவித்தீர்கள்? வாருங்கள்! வயது செல்ல முன்பு, இந்தக் கொஞ்சக் காலத்திலே நாம் உல்லாசமாக இருப்போம் என்று இழுக்கின்றது. ஏனெனில் இந்த உலகமானது சாத்தானின் தந்திரமான வலைக்குள் அகப்பட்டிருக்கின்றது. அவனுக்கு கொஞ்சக் காலம்தான் இருக்கின்றபடியால கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான். எனவே, தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள் என்றும், எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று. ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயிருங்கள் என்று பரிசுத்த வேதாகமமம் நமக்கு எச்சரிக்கின்றது. பிரியமானவர்களே, கொஞ்சக் காலம்தான் இருக்கின்றது என்பது உண்மை. ஆனால், அந்த கொஞ்சக் காலத்தை நாம் எப்படியாக செலவு செய்யப் போகின்றறோம் என்பதை குறித்து நாம் தீர்மானம் செய்து கொள்ள வேண்டும். நமக்கு கிடைத்திருக்கும் கொஞ்சக் காலத்தில், மாம்ச இச்சைகளுக்கும் இந்த உலகத்தின் சுகபோகங்களுக்குள் சிக்கிக் கொள்ளாமல், இந்தப் பூமியிலே வாழும்வரை பிதாவாகிய தேவனின் சித்தத்தை செய்து, நித்திய ஜீவனை பரிசாக பெற்றுக் கொள்வதையே நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அற்பமான உலக ஆசைகளுக்காக நித்தியமான கன மகிமையை இழந்து போய் விடாதபடிக்கு, இந்நாட்களிலே தெளிந்த புத்தியுள்ளவர்களாக மேலானவைகளை நாடித் தேடுவோமாக.

**ஜெபம்**: காலங்களையும் நேரங்களையும் அறிந்த தேவனே, இந்த பூமியிலே வாழும் நாட்களிலே உம்முடைய திருச்சித்தத்தை செய்வதையே நான் நோக்கமாக கொண்டிருக்கும்படி உணர்வுள்ள இருதயத்தை தந்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உபத்திரவங்கள் அதிகமாயிருக்கின்றதே?

மனவேதனைகள் தாங்க முடியவில்லை. எத்தனை காலம் பொறுமையாக இருப்பது? நான் செய்யும் நன்மைக்கு கைமாறாக தீமை செய்கின்றார்கள். மற்றவர்கள் தவறி விழும்போது எத்தனையோ தடவைகள் அவர்களுக்கு ஊன்றுகோலாக இருந்தேன். ஆனால், அவர்கள் எழுந்திருந்த பின்பு, நான் எப்போது விழுவேன் என்று என் அழிவுக்காக காத்திருக்கின்றார்களே. நான் அமைதியாக இருக்கின்றேன் என்று அகங்காரமாக பேசுகின்றார்கள் என்று உத்தமமாக வாழும் விசுவாசியானவன் தன் மனவேதனைகளை கூறிக் கொண்டான். இத்தகைய அனுவங்களுக்கூடாக நாமும் சென்றிருக்கலாம் அல்லது சென்று கொண்டிருக்கலாம். அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் தீமையை பிணைக்கின்றவர்களை போலல்லாது, தீமைக்கும் நன்மை செய்கின்ற பக்கத்திலே காணப்பட வேண்டும். இந்த உலகத்திலே மற்றவர்களிடத்திலே கைமாறு கருதி நன்மை செய்யாமல், விண் கைமாறு மிகுதியாக இருக்கும் படிக்கு, கர்த்தரை நம்பி நன்மை செய்வதையே நாம் நாட வேணடும். நாளுக்கு நாள் உள்ளாள மனிதனானது புதிதாக்கப்பட்டு, ஆண்டவராகிய இயேசுவின் சாயலிலே வளர்வதையே நாம் கருத்தில் கொள்ள வேண்டும். எதிராளியாகிய பிசாசானவன் நம்முடைய விழுகையை எதிர்பார்த்து தன்னுடைய கிரியைகளை, தன் தந்திரங்களுக்கு இடங் கொடுக்கும் வழுப்போகின்ற இருதயமுள்ள மனிதர்கள் வழியாக நடத்தி வருகின்றான். நீங்களோ, விசுவாசத்தில் உறுதியாயிருங்கள். நற்கிரியைகளை நடப்பிப்பதில் சோர்ந்து போகாமல், பிசாசானவனுக்கு எதிர்த்துநில்லுங்கள். நம்முடைய போராயுதங்கள் மாம்சத்தின் பெலன் அல்ல. நாம் ஆவியிலே பெலன் கொண்டு, மாம்சத்தை ஜெயிக்கின்ற வர்களாக இருக்கின்றோம். நாம் தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லுகின்றவர்களாகயிருக்கின்றோம். உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறி வருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே. கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக.

**2 கொரிந்தியர் 4:17**

**அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது.**

**ஜெபம்:** நித்திய கனமகிமைக்கு என்னை அழைத்த தேவனே, ஆண்டவர் இயேசு இந்த உலகத்தை ஜெயித்தது போல, நானும் ஜெயங்கொள்ளும்படிக்கு என்னை பெலப்படுத்தி வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மறைதிருக்க முடியாது

இந்த சமுகம் மிகவும் கொடூரமானது. நன்மையும் வேண்டாம், தீமையும் வேண்டாம். நானும் என்பாடும் என்று வாழ்ந்துவிட்டால் பிரச்சனைகள் இல்லை என்று கூறி ஒரு மனிதனானவன், தன்னை தனிமைப் படுத்திக் கொண்டான். சில வேளைகளிலே, நம் வாழ்வில் ஏற்படும் உபத்திரவங்கள் இப்படியாக நம்மை சிந்திக்கத் தூண்டுகின்றது. நாம் கோணலும் மாறுபாடுமுள்ள சந்ததி நடுவே வாழ்ந்து கொண்டிருக் கிறோம் என்று சத்திய வேதம் கூறு கின்றது. உலகம் உங்களைப் பகை த்தால், அது உங்களைப் பகைக் கிறதற்குமுன்னே என்னைப் பகை த்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன் னுடையதைச் சிநேகித்திருக்கும் நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரிந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது என்று ஆண்டவராகிய இயேசு கூறியி ருக்கின்றார். உலகம் தன்னை பகைத்தது என்று கூறி ஆண்டவராகிய இயேசு இந்த உலத்தை தள்ளிவிடவில்லை. ஒருவனும் கெட்டுப்போ காமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, தம்மைத் தாமே பலியாக ஒப்புக் கொடுத்தார். எனவே, அவருடைய சிநேகிதர்களாகிய நாமும், அவரைப் போல மாற வேண்டும். சமுகம் நம்மை பகைக்கின்றது என்று கூறி, நம்முடைய நன்மைகளை புதைத்து வைக்க முடியாது. நாம் பெற்ற தலாந்துகளை நாம் பெருக்குகின்றவர்களாக காணப்பட வேண் டும். நாம் கனியற்ற மரம்போல வாழமுடியாது. மகா வறட்சியான கால த்திலும், இலையுதிராத மரம் போல, நற்கனிகளைக் கொடுக்கின்ற வர்களாக நாம் மாற வேண்டும். சில வேளைகளிலே சமுகமானது நமக்கு மகா வறட்சியாக காலம் போல தோன்றலாம். அதனால், நாம் நம் நற்கனிகளை கொடுக்காமல் இருப்பது சரியாகுமோ? நீங்கள் உலகத்துக்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது. விளக்கைக் கொளுத்தி மரக்காலால் மூடிவைக்காமல், விளக்குத் தண்டின்மேல் வைப்பார்கள் அப்பொழுது அது வீட்டிலுள்ள யாவருக்கும் வெளிச்சம் கொடுக்கும். இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது என்று ஆண்டவர் இயேசு கூறியிரு க்கின்றார். எனவே காலத்தை விரையாமாக்காதிருங்கள்.

**எபேசியர் 5:16**

நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தைப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுங்கள்.

**ஜெபம்:** அதிக கனிகளை கொடுக்கும்படி என்னை சுத்திகரிக்கும் தேவனே, நான் ஞானமற்றவர்களைப்போல நடவாமல், ஞானமுள்ளவர்களைப்போலக் கவனமாய் நடந்துகொள்ளும்படி உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக.. இரட்சகர்இயேசுவழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# இந்நாளிதே கர்த்தர் படைத்தார்

நிலையான மாறாத சந்தோஷம் இந்த உலக வாழ்வில் உண்டாக வேண்டும் என்று அந்த நாளை நோக்கி மனிதர்கள் பிரயாசப்படுகின்றார்கள். அதிகாரங்கள் மாறினால் நிறைவு உண்டாகும். நாடுவிட்டு நாடு சென்றால் மனநிம்மதி வரும். பிள்ளைகள் தலைதூக்கினால் வாழ்வின் தொல்லைகள் ஓய்ந்து போய்விடும். நல்ல உத்தியோகத்தில் அமர்ந்தால் குறைவுகள் நிறைவாகும் என்று பலதரப்பட்ட எண்ணங்களோடு நாளைய நாளை நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றார்கள். மனிதர்கள் தாங்கள் அறியாத எதிர்காலத்தைக் குறித்த பயம் அவர்கள் மனதை அழுத்திக் கொள்வதால், இன்றைய நாளிலே சந்தோஷமாக இருக்க மறந்து போய்விடுகின்றார்கள். விலைவாசிகள் மாறிக் கொண்டிருக்கும் இந்த உலகத்திலே, என்னத்தை உண்போம்? என்னத்தை குடிப்போம்? என்னத்தை உடுத்துவோம் எங்கே தங்குவோம்? என்ற கேள்விகள் மனதில் உண்டானால், அது பரம பிதாவை அறியாத மனிதர்களுக்குரிய சிந்தை என்பதை நன்றாக அறிந்து கொள்ளுங்கள். இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார். இன்றைய நாளில் சந்தோமாகவும், நாளைய நாளைக் குறித்து கவலையற்றவர்களாகவும் வாழ விரும்பும் மனிதர்கள், தங்கள் வாழ்விலே முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுகின்றார்கள். இன்றைய நாளிலே மன அழுத்தத்துடனும், நாளைய நாளைக் குறித்த கவலையுள்ளவர்களுமாக வாழ விரும்புகின்றவர்கள் இந்த உலகத்தின் தேவைகளை தங்கள் வாழ்வில் முதன்மைப் படுத்தி, அவைகளை நாடித் தேடுகின்றார்கள். அதையே தங்கள் பிள்ளைகளுக்கும் கற்றுக் கொடுகின்றார்கள். அதனால், இருக்கின்ற நாட்களிலே சந்தோஷமாக வாழாமல், அவர்கள் தொடுவானமாக இருக்கும் வசதியைத் தேடி வாழ்நாள் முழுவதும் ஓடிக் கொண்டிருக்கின்றார்கள். பிரியமானவர்களே, இது கர்த்தர் உண்டுபண்ணின நாள். ஆளுகை செய்யும் ஆண்டவர் இயேசு நம்மோடு இருக்கின்றார். காலைதோறும் அவர் நமக்கு புதிய கிருபையைத் தருகின்றார். நம்முடைய தேவைகளை அறிந்த யெயோவா யீரே நம்பக்கம் இருக்கின்றார். எனவே இந்த நாளிலே களிகூர்ந்து மகிழக்கடவோம். அவர் உங்களை விசாரிக்கின்றவராயிருக்கின்றார். எனவே தேவன் தந்த மேன்மையான பரலோக ஆசீர்வாதங்களை தியானியுங்கள். எல்லா சூழ்நிலைகளிலும், அவருக்குள் மனரம்யமாகயிரு கற்றுக் கொள்ளுங்கள்.

**சங்கீதம் 118:24**

**இது கர்த்தர் உண்டுபண்ணின நாள், இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்.**

**ஜெபம்**: நிறைவான வாழ்விற்கு என்னை அழைத்த தேவனே, உம்முடைய அழைப்பின் நோக்கத்தை மறந்து போகால், இலக்கை நோக்கி நான் பொறுமையோடு முன்னேறிச் செல்ல நீர் எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

புதன் | ஒக்டோபர் 25

📖 மாலை வாசகம் – நெகேமியா 8:10

# சந்தோஷத்திற்காக பிரயாசப்படுகின்றவர்கள்

தன் குடும்பம் சந்தோஷமாய் வாழ வேண்டும். தன் சந்ததி வளமாய் இருக்க வேண்டும், பிள்ளைகள் நிறைவடைய வேண்டும் என்ற நோக்கத்துடன், ஒரு மனிதனானவன் அநேக வருடங்களாக இரவு பகலாக அயராது உழைத்து வந்தான். குடும்பத்தோடு இருந்து அமைத்தியாக ஒரு ஆகாரத்தை உண்ணவோ, பிள்ளைகளை பாடசாலைக்கு அழைத்துச் செல்லவோ, அவர்களுடைய விசேஷ நிகழ்வுகளில் பங்கு பெற்றவோ அவனுக்கு நேரமில்லாதிருந்தது. இவை எல்லாவற்றிலும், தான் தன் குடும்பத்தின் சந்தோஷத்திற்காகவும், பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவுமே அரும்பாடு படுகின்றேன் என்பது அவனுடைய நியாயமாக இருந்தது. அவன் ஓய்வு பெறும் நாட்கள் அண்மித்ததும் அவன் தன் பிரயாசத்தின் பலனை அடைந்து கொண்டான். அவன் விரும்பியதுபோல தன் உலக ஆஸ்திகளை பெருக்கிக் கொண்டான். அதுமட்டுமல்ல, பிள்ளைகளின் வாழ்க்கையிலே பெற்றோர் வேண்டும் என்று இருந்த காலம் தணிந்து போயிற்று. குடும்ப ஐக்கியம் இல்லாமற் போயிற்று. சந்தோஷமாய் வாழ வேண்டும் என்று அலைந்து திரிந்து தன் காலத்தை வீணாக்கி விட்டேன் என்பதை அவன் உணர ஆரம்பித்தான். பிரியமானவர்களே, மனிதர்கள் தங்கள் வாழ்வின் முன்னேற்றத்திற்காக பிரயாசப்படுவதில் தவறில்லை. ஆனால், மனிதனுடைய எல்லா பிரயாசமும் அவனுக்கு சந்தோஷத்தை கொடுப்பதில்லை. பிள்ளைகளின் வாழ்விற்காக உழைக்கின்றோம் என்று ஓடும் பெற்றோர்கள், பிள்ளைகளின் நாளாந்த வாழ்க்கையில் தாங்கள் உறுதியாக பிணைக்கப்பட்டிருக்க வேண்டும் என்ற எண்ணத்தை மறந்து, அவர்களை விளையாட்டுப் பொருட்களாலும், நவீன சாதனங்களாலும், பரிசுப் பொருட்களினாலும் திருப்திப்படுத்த முயற்சிக்கின்றார்கள். ஒரு மனிதனானவன் எதை நாடி ஓடுகின்றானோ அவன் அதை பெற்றுக் கொள்கின்றான். இந்த உலகத்தின் போக்கினால் நன்மைகள் உண்டாகும் என்று அதன் வழியியிலே போகின்றவன் இந்த உலத்திற்குரியவைகளையே தன் பலனாக பெற்றுக் கொள்கின்றான். இந்த உலகம் தரக்கூடாத சந்தோஷத்தை நிறைவாக தரும் ஆண்டவர் இயேசுவின் வார்த்தைகளை கைகொள்கின்றவன், பணமுமின்றி விலையுமின்றி, தன் அனுதின வாழ்க்கையிலே நிறைவான சந்தோஷத்தையும் மனத்திருப்தியையும் பெற்றுக் கொள்கின்றான்.

**சங்கீதம் 16:11**

உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலதுபாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு.

**ஜெபம்**: ஜீவ மார்க்கத்தை எனக்கு தெரியப் படுதின தேவனே, உணர்வற்ற வாழக்கை பின்பற்றி, நீர் கொடுத்த நாட்களை நான் விரையப்படுத்தாமல், உமக்குள்ளே நிறைவாக வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

**வியாழன் | ஒக்டோபர் 26** — 📖 மாலை வாசகம் – 1 பேதுரு 5:8

# நாளைய தினத்தின் மேன்மை

ஐசுவரியத்தின் திரட்சியினால் இன்று மனிதர்கள் தங்கள் வாழ்க்கையை குறித்து மேன்மைபாராட்டுகின்றார்கள். இன்று நான் வியாபார அலுவலாக அந்த பட்டணத்திற்கு செல்ல வேண்டும். இன்னும் இரண்டு மாதங்களில் நான் கப்பலிலே உல்லாசப் பணயம் செல்ல ஆயத்தங்கள் செய்திருக்கின்றேன். என் பிள்ளைகள் உலகிலே பிரபல்யமான பல்கலைகழகத்திலே படிக்கும்படி ஏற்பாடுகளை செய்து வைத்திருக்கின்றேன். வேலையிலிருந்து ஓய்வு பெற்றபின்பு, நாட்களை சந்தோஷமாக கழிக்க, வெளியூரிலே, அடுத்த வருடம், இன்னுமொரு வீட்டை கொள்வனது செய்ய உத்தேசித்திருக்கின்றேன் என்று ஒரு மனிதனானவன் தன் வாழ்கையின் எதிர்கால நடவடிக்கைகளைப் பற்றி பெருமை பாராட்டிக் கொண்டிருந்தான். திட்டமிட்டு வாழ்வதில் தவறில்லை. ஆனால், அந்த திட்டத்திலே தேவனு டைய சித்தம் எங்கே இருக்கின்றது என்பதை ஒரு மனிதன் நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும். “மேலும், நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கே ஒருவரு‘ம் தங்கி, வியாபாரஞ்செய்து, சம்பாத்தியம்பண்ணுவோமென்கிறவர்களே, கேளுங்கள். நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே. ஆதலால்: ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும். இப்பொழுது நீங்கள் உங்கள் வீம்புகளில் மேன்மை பாராட்டுகிறீர்கள் இப்படிப்பட்ட மேன்மைபாராட்டல் யாவும் பொல்லாங்காயிருக்கிறது.” (யாக்கோபு 4:13-16). என்று இவைகளை குறித்து பரிசுத்த வேதாகமம்கூறும் ஆலோசனைகளையும் எச்சரிப்புக்களையும் கூறுகின்றது. பிரியமானவர்களே, கடந்த நாட்களுக்காக தேவனுக்கு நன்றியை செலுத்துங்கள். இன்றைய நாளிலே கர்த்தருக்குள் மகிழ்சியாய் இருங்கள். நாளைய நாளை கர்த்தரிடத்தில் ஒப்புக் கொடுங்கள். நம்முடைய வாழ்க்கையின் மேன்மை என்ன? ஏன் நாம் விசேஷித்தவர்களாக இருக்கின்றோம்? கர்த்தரை நம் தெய்வமாக கொண்டிருப்பதினாலும், அவர் நம்மோடு இருப்பதினாலுமே நாம் விசேஷித்தவர்களாக இருக்கின்றோம். எனவே மேன்மை பாராட்ட விரும்புகின்றவன் கர்த்தருடைய கிருபையையும், அவருடை சிலுவையையும் குறித்தே மேன்மை பாராட்டக் கடவன்.

**நீதிமொழிகள் 27:1**

நாளையத்தினத்தைக்குறித்துப் பெருமைபாராட்டாதே; ஒருநாள் பிறப்பிப்பதை அறியாயே.

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, மேன்மையான அழைப்பை எனக்கு தந்தவரே. இந்த உலகத்தின் மாயையிலே நான் சிக்குண்டு மாளாதபடிக்கு, உம்முடைய வார்த்தையில் உறுதியாய் நிலைத்திருக்க கிருபை செய்வீராக. இட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# நிலையற்ற உலக வாழ்வு

இன்னும் ஆறு நாட்களிலே, பெரும்புயலொன்றானது அதி வேகமாக இந்த பட்டணத்தைக் கடந்து செல்லும். அதனால், அடுத்த சில தினங் களில், யாவரும் அந்தப் பட்டணத்தைவிட்டு வெளியேற வேண்டும் என்று அந்த தேசத்தின் அதிகாரிகளினால் உத்தியோக பூர்வமான எச்சரிப்பின் அறிவித்தல் விடப்பட்டது. அதை கேட்ட ஜனங்களில் அநேகர், அந்த எச்சரிப்புக்கு செவி மடுத்து, அத்தியவசியமான பொரு ட்களை எடுத்துக் கொண்டு, துரித மாக அந்தப் பட்டணத்தைவிட்டு வெளி யேறினார்கள். ஆனால், சிலரோ, இவர்கள் இப்படித்தான் கூறுவார்கள் ஆனால் அங்கே ஒன்றும் நடக்கப் போவதில்லை என்று அந்த எச்சரி ப்பை அசட்டை செய்தார்கள். ஆறாம் நாளிலே, விடப்பட்ட எச்சரிப்பின்படி, சடுதியாக, பெரும் புயலானது அந்த பட்டணத்தின் வழியாக கடந்து சென்றதால், அந்தப் பட்டணத்தில் தங்கியிருந்தவர்களில் ஒருவர்கூட தப்பித்துக் கொள்ள முடியாமற் போயிற்று. வரவிருக்கும் அழிவைப் பற்றி எச்சரிப்பை ஏற்று, ஞானமாய் நடந்து கொள்கின்றவர்கள் தங்களை காத்துக் கொள்கின்றார்கள். நம்மு டைய இந்த பூவுல வாழ்க்கையானது நிரந்தரமற்றதாக இருக்கி ன்றது. அதை உணர்ந்து ஏற்றுக் கொள்கின்வர்களின் சிலர், தாங்கள் இச்சித்த வைகள் யாவையும் சீக்கிரமாக நிறைவேற்றுகின்றார்கள். இப்படிப்பட்ட வர்களை மதியற்றவர்கள் என்றும் தூங்குகின்றவர்கள் என்றும் பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. ஆனால், ஞானமுள்ளவர்களோ, நாட்களை அறியும் அறிவை அடையும் போது, உணர்வடைந்து, தங்கள் வாழ் நாட்களை பிரயோஜனப்படுத்திக் கொள்கின்றார்கள். கர்த்தாவே, நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும்படி என் முடிவை யும், என் நாட்களின் அளவு இவ்வளவு தான் என்பதையும் எனக்குத் தெரி வியும். எந்த மனுஷனும் மாயையே என்பது நிச்சயம். வேஷமாகவே மனுஷன் திரிகிறான் விருதாவாகவே சஞ்சலப்படுகிறான். ஆஸ்தியைச் சேர்க்கிறான், யார் அதை வாரிக்கொள்ளுவான் என்று அறியான் என்று ஒரு தேவ பக்தன் கூறினார். இந்த நிலையற்ற வாழ்க்கையிலே கர்த்தரே நம்முடைய அசையாத நம்பிக்கையாக இருக்கின்றார். இந்த வாழ்க்கை கடந்து போகும் ஆனால் கர்த்தரோ, தம்மைப் பின்பற்றுகின்றவர்களுக்கு நிலையான நகரமாகிய பரலோகத்திலே நித்தியமாக அவரோடு வாழும் பாக்கியத்தை கொடுக்கின்றவராயிருக்கின்றார். எனவே நாட்களை அறி ந்து ஞானமுள்ள பிள்ளைகளாக வாழ்வோமாக.

**சங்கீதம் 39:7**

இப்போதும் ஆண்டவரே, நான் எதற்கு எதிர்பார்த்தி ருக்கிறேன்? நீரே என் நம்பிக்கை.

**ஜெபம்**: வெளிச்சத்தின் பிள்ளைகளாக நம்மை மாற்றிய தேவனே, மற்ற வர்கள் தூங்குகிறதுபோல நாம் தூங்காமல், எப்போதும் விழித்துக் கொண்டு தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருக்க எனக்கு கிருபை செய் வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# வேண்டப்படாத வேதனைகள்

ஒரு வீட்டின் முற்றத்தின் ஒருபக்கமாக ஒரு பெரிய மரம் இருந்தது. அந்த மரத்தின் நிழலிலே இருந்து நீங்கள் விளையாடலாம் ஆனால் எந்தக் காரணம் கொண்டும் அந்த மரத்தில் ஏறக்கூடாது என்று தகப்பனானவர் தன் பிள்ளைகளுக்கு திட்டமாகவும், தெளிவாகவும் கூறியிருந்தார். ஒரு நாள் தகப்பனானவர், வேலையலுவலாக வெளியூருக்கு சென்றிருந்தபோது, இளைய மகனானவன், அந்த மரத்தின் முதலாவது கொப்பில் ஏறி, அங்கே அமர்ந்து கொண்டு, தன் அண்ணனை நோக்கி: அண்ணா, இங்கே பார், நான் மரத்தில் ஏறிவிட்டேன் என்று பரவசத்துடன் கூறினான். அதைக் கண்ட அண்ணனாவன், தம்பி முதல் கொப்பில் ஏறிவிட்டான் எனவே நான் மூன்றாம் கொப்பில் ஏறிக் காட்டுவேன் என்று மேலே ஏறி அங்கே இருந்து விட்டான். அந்த மரத்திலே காகம் கூடு கட்டி குஞ்சு பொரித்திருந்ததால், காகங்கள் ஒன்றுகூடி அவர்களை தாக்கியதால், அவர்கள் தீவிரமாக இறங்க முற்பட்டபோது, இருவரும் கீழே விழுந்து காயப்பட்டார்கள். அதிகமாக மேலே ஏறிய அண்ணனுக்கு பலத்த காயமும், கொஞ்ச உயரத்திற்கு ஏறிய தம்பிக்கு சின்ன காயங்களும் ஏற்பட்டது. தகப்பனானவர் வீடு திரும்பிய போது, தன் பிள்ளைகளின் செயலை குறித்து மிகவும் கோபமடைந்தார். ஆனால், உயிர் தப்பியதையிட்டு சந்தோஷப்பட்டார். தாயானவள், தன் கணவனை நோக்கி: ஏன் அந்த மரத்தை வைத்திருக்கின்றீர்கள், அதை வெட்டிப் போடுங்கள் என்றாள். அதற்கு அவர், நாங்கள் இந்த வீட்டில் இருக்கும்வரை அந்த மரம் நிழலுக்கு அவசியமானது. இல்லாவிடில், வெப்ப நாட்களை நாங்கள் தாங்க கூடாமல் போய்விடும் என்று கூறினார். பிரியமானவர்களே, நாம் இந்த உலகத்திலே கொஞ்சக் காலம் வாழ வேண்டியதாக இருக்கி ன்றது. ஆனாலும், நாம் உலகத்திற்கு ஒத்த வேஷம் தரித்து அதன் போக்கில் செல்லக் கூடாது என்ற எச்சரிப்பை பெற்றிருக்கின்றோம். தங்கள் தகப்பனானவரின் சொல்லைக் கேளாமல், அந்த மரத்திலேறிய பிள்ளைகளைப் போல, பரம பிதாவின் சொல்லை மீறி தங்களை உலக போக்கிற்கு ஒப்புக் கொடுகின்றவர்கள், அதனால் உண்டாகும் வேதனைகளை நிச்சயமாக அடைவார்கள். நிலையான நகரம் நமக்கு இங்கே இல்லை. வரப்போகிறதையே நாடித் தேடுகிறோம். எனவே, இந்த உலகத்திலே தரித்திருக்கும் கொஞ்ச நாட்களிலே, புத்தியுள்ள பிள்ளைகளைப் போல கீழ்ப்படிவுள்ளவர்ளாக இருப்போமாக.

**ரோமர் 12:2**

**நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல்,**

**ஜெபம்**: என் மனதை புதிதாக்கும் பரித்தரே, உம்முடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறிந்து, நாளுக்கு நாள் நான் மறுரூபமாகும்படி என்னை உம் வழியில் நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# உங்களை தனிப்படுத்தாதிருங்கள்

மலை சார்ந்த வெளிகளிலே காளைகள் பெருங்கூட்டமாக மேய்ந்து கொண்டிருந்தது. ஆயிரக்கணக்கான காளைகள் பட்சிக்கின்ற வனவில ங்குகளை காணும் போதெல்லாம், மிரண்டு ஓடுவதுண்டு. அவைகள் கூட் டமாக ஓடும் போது, காட்டில் வாழும் சிங்கங்களோ, புலிகளோ, காண்டா மிருகங்களோ அவைகளை எதிர்த்து நிற்க முடியாது. அவை கள் தங்கள் முன்பாக வரும் யாவ ற்றையும் மிதித்துப் போடும். அத னால், பட்சிக்கின்ற வனவிலங்கு கள், தங்கள் இரைக்காக, ஒரு காளையை அந்தக் கூட்டத்திலிரு ந்து தனிப்படுத்தி, அதை பட்சித்து போடும். அதுபோலவே, எதிராளி யாகிய பிசாசானவனும், கெச்சிக் கின்ற சிங்கத்தைப் போல யாரை விழுங்கலாம் என்று வகை தேடி த்திரிகின்றான். விசுவாசிகள் ஐக்கியத்தைவிட்டு தங்களை தனிப்ப டுத்தும் போது, அவர்கள் பெலனற்றிருக்கின்ற நாடகளிலே, அவர்க ளை இலகுவாக அவன் தன்னுடைய தந்திரமான கண்ணிக்குள் சிக்க வைத்துக் கொள்வான். எனவே, நித்திய ஜீவனுக்கென்று அழைக்கப் பட்ட நீங்கள், முதலாவதாக, ஆண்வராகிய இயேசுவோடு ஐக்கியமு ள்ளவர்களாக இருக்க வேண்டும். அதை எப்படி அறிந்து கொள்வது? அவன் தன் வாழ்விலே மிகுந்த கனிகளைக் கொடுப்பான் என்று ஆண் டவர் இயேசு கூறியிருக்கின்றார். ஒரு விசுவாசியானவன், ஆண்ட வர் இயேசுவோடு ஐக்கியமாக இருந்தால், ஆண்டவர் இயேசுவோடு ஐக்கி யமாக இருக்கும் மற்றவர்களோடும் ஐக்கியமாக இருப்பான். ஐக்கிய த்திலே இணைந்து இசைந்திருக்கின்றவர்கள் பெலமுள்ளவாக இருக்கி ன்றார்கள். ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கிவிடுவான் ஒண்டியாயிருந்து விழுகிறவ னுக்கு ஐயோ, அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே. இரண்டுபேராய்ப் படுத்துக்கொண்டி ருந்தால் அவர்களுக்குச் சூடுண்டாகும் ஒண்டியாயிருக்கிறவனுக்குச் சூடு ண்டாவது எப்படி? ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம் முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது. பிரியமானவர்களே, தேவன் போட்ட எல்லைகளை உடைத்துப் போடாதிருங்கள். படுகுழியை வெட்டுகிறவன் அதிலே விழுவான் அடை ப்பைப் பிடுங்குகிறவனைப் பாம்பு கடிக்கும். எனவே, இசைந்த ஆத்து மாக்களாக கிறிஸ்துவின் ஐக்கியத்திலே நிலை கொண்டிரு ங்கள்.

**பிரசங்கி 4:9**

ஒண்டியாயிருப்பதிலும் இரு வர் கூடியிருப்பது நலம்; அவ ர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலனு ண்டாகும்.

**ஜெபம்**: உம்மோடு ஐக்கியமாக இருக்கும்படி அழைத்த தேவனே, நான் ஐக்கியத்தை உடைகின்றவனாக வாழாமல், நெருக்கடியான நேரங்க ளிலும் ஐக்கியத்தை வளர்க்கின்றவனாக வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# மனதைக் கடினப்படுத்திக் கொள்ளாதிருங்கள்

ஒரு சமயம், ஆண்டவராகிய இயேசு, தம்முடைய ஜனங்களை நோக்கி: தேவனுடைய தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகின்றவர்களே. கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன் உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று என்று கூறினார். இன்றைய நாட்களிலே, வாழும் நாமோ, தேவனுக்கு பிரியமாக இருந்த ஆபேலை, அவன் சகோதரனான காயீன், எரிச்சலினாலேகொன்று போட்டான் என் பதை வாசிக்கும் போது, அச்செயல்வன்முறையென்றும், மனித அபிமானம் இல்லாத கொடூரமான தீயசெயலென்றும், நாங்களோ அப்படி செய்ய மாட்டோம் என்றும் நாங்கள் தீர்க்கதரிகளுடைய வார்த்தைகளை கேட்கின்றவர்களாக இருக்கின்றோம் என்றும் திட்டமாக கூறிவிடுகின்றவர்களாக இருக்கின்றோம். இப்படியாக ஆபேல் முதல் சகரியா வரை க்கும் எதற்காக கொலை செய்யப்பட்டார்கள். தேவன் அவர்கள் வழியாக, தம்முடைய ஆலோசனைகளையும், அறிவுரைகளையும், எச்சரிப்புக்களையும் ஜனங்களுக்கு அனுப்பினார். அதை கேட்டவர்கள் மிகவும் கோபமடைந்து, அவர்களை அகற்ற வேண்டும் என்று தீர்மானம் செய்தார்கள். எத்தனையோ முறை தேவனானவர், தம்முடைய ஜனங்களை தம்மிடம் கூட்டிக் சேர்க்க மனதாயிருந்தும், ஜனங்களோ தங்கள் மனதை கடினப்படுத்திக் கொண்டார்கள். அதுபோலவே, இன்று, தேவனுடைய வார்த்தையை கேட்பதற்கு பலர் மனதற்றவர்களாகவே இருக்கின்றார்கள். பாடல்கள் பாட, தங்கள் மனதிற்கேற்ற பிரசங்கம், தேநீர் வேளை, செயற்திட்டங்கள் என்று இவைகளை நாடுகின்றார்கள். ஆனால், மனந்திரும்புதல், பாவமன்னிப்பு, பரிசுத்தவாழ்வு, தேவ ஆலோசனைகள், தேவனுடைய சிட்சை, தேவ எச்சரிப்புக்களை கூறி உண்மையாக வேதமானது பேசப்படும் போது, அவர்களுடைய சொந்த மனசாட்சி அவர்களை குற்றப் படுத்துவதால், அதை கேட்க மனதி ல்லாமல் தங்கள் காதுகளை அடைத்து, தங்களை அந்த இடத்திலிருந்து அகற்றிக் கொள்கின்றார்கள். பிரியமானவர்களே, தேவன் தம்முடைய ஜனங்களகிய நம்மையும் தம்மோடு சேர்த்துக் கொள்ள மனதுள்ளவராகவே இருக்கின்றார். நீங்கள் தேவனோடு சேர்ந்து கொள்ளும்படி மனதுள்ளவர்களாக இருக்கின்றீர்களா?

**மத்தேயு 23:37**

**நான் எத்தனைதரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று.**

**ஜெபம்:** என்னை தெரிந்து கொண்ட தேவனே, உம்முடைய சத்தத்தை கேட்கும் போது, என் இருதயத்தை நான் கடினப்படுத்தாமல், உம்முடைய வார்த்தைக்கு கீழ்படியும் இருதயத்தை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.

# தம்முடையவர்களை சேர்த்துக் கொள்வார்

கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார் தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார் இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும், என்னை அனுப்பினார் என்ற தீர்க்க தரிசன வார்த்தையை நிறைவேற்றும்படி ஆண்டவராகிய இயேசு இந்த பூமிக்கு வந்தார். இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார் அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார் என்ற பிரகாரமாக, மெசியாவாகி நம் இயேசு பாவிகள் மனந்திரும்பி இரட்சிப்படையும் படி அழைக்க வந்தார். அவர் மறுபடியும் வருவார். வரும்போது, அவர் பாவிகளையல்ல, தங்கள் பாவதிலிருந்து மனதிரும்பி, பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்து, பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை தங்களுடைய வாழ்விலே நிறைவேற்றி முடித்த, தம்முடைய பரிசுத்தவான்களை தன்னோடு சேர்த்துக் கொள்ளும்படி ராஜாதி ராஜாவாக, கர்த்தாதி கர்த்தாவாக இதோ மேகங்களுடனே வருவார். அதுமட்டுமல்ல, இதோ, எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறதற்கும், அவர்களில் அவபக்தியுள்ளவர்கள் யாவரும் அவபக்தியாய்ச் செய்துவந்த சகல அவபக்தியான கிரியைகளினிமித்தமும், தமக்கு விரோதமாய் அவபக்தியுள்ள பாவிகள் பேசின கடின வார்த்தைகளெல்லாவற்றினிமித்தமும், அவர்களைக் கண்டிக்கிறதற்கும், ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார் என்ற தீர்க்கதரிசனமும் அந்நாளிலே நிறைவேறும். இன்று பலர் அன்பு என்ற போர்வையிலே பரிசுத்தத்தை சமரசம் செய்கின்றார்கள். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனை தரிசிக்க முடியாது. ஒருவரும் அழிந்து போகாதபடிக்கு, கர்த்தர் நீடியபொறுமையுள்ளவராக இருந்து, யாவர் மேலும் தம்முடைய கிருபையை பொழிகின்றார். எனவே, அவருடய கிருபையை உதாசினப்படுத்தாதபடிக்கும், உங்கள் தவறான வழிகளை நியாப்படுத்தாதபடிக்கும், சபைகளிலே குழப்பங்களையும் பிரிவினைகளையும் உண்டாக்காதபடிக்கும் வாழ்ந்து, பரிசுத்தமாகுதலை தேவ பயத்தோடு பூரணப்படுத்துங்கள். "இதோ, சீக்கிரமாய் வருகிறேன் அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" என்று ஆண்டவர் இயேசு கூறியிருக்கின்றார்.

**2 கொரிந்தியர் 7:1**

பரிசுத்தமாகுதலை தேவபயத்தோடே பூரணப்படுத்தக் கடவோம்.

**ஜெபம்**: அன்பில் என்னை பரிசுத்தமுள்ளவனாக்க சித்தம் கொண்ட தேவனே, நான் நல்ல நாட்களை விருதாவாக்காமல், இன்னும் பரிசுத்தமாக்கும்படிக்கு உம்முடைய வார்த்தையின் வழியிலே நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமென்.